


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பசி

ஆசிரியர் :-

மாதகல் செல்வா

விற்பனையாளர் :-

பாலசிங்கம் புத்தகசாலை,
27, பெரியகடை, யாழ்ப்பாணம். இலங்கை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதற் பதிப்பு மார்கழி 1962

உரிமை ஆசிரியருக்கே

**விலை ரூபா ஒன்று**

அச்சுப் பதிவு

**தமிழ்நாடு அச்சகம்**

நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

# நாம் எங்கே போகின்றோம்?

யாழ்ப்பாணத்துப் பிரபல வீதிகளில் சுற்றிச் சுழன்று அலைந்து திரிந்து, "ரோட்டளப்பது" எனது தினசரி வேலைகளில் ஒன்று.

இப்படியாகத் திரிவதில் எனக்கு ஒரு குஷி! — ஏகப்பட்ட மகிழ்ச்சி!

இப்படியான ஒரு வீதி உலாத்தலில்தான் ஒரு நாள் இச் சிறுகதைத் தொகுதியின் ஆசிரியரைச் சந்தித்தேன்.

— இருவரும் நண்பர்களானோம்.

நாங்கள் நாலைந்து இலக்கிய இளசுகள், நாற்சந்தி மூலைகளில் நின்று இலக்கியப் பிரச்சினைகள் பற்றி ஏதோ நமக்குத் தெரிந்தவற்றைப் பேசி, தர்க்கித்து, விவாதித்துக் கொண்டிருப்போம். சில மாஜி இலக்கிய விற்பன்னர்கள் நம்மைப் பார்த்தும் பார்க்காததுபோல பாவலாப் பண்ணிப் போகும் நிகழ்ச்சிகளும் இரண்டொரு நாள் நடைபெறாமலில்லை. இருந்தும் நமது குழு வளரத்தான் செய்தது. அதில் தன்னையும் ஓர் அங்கமாக்கிக் கொண்டவர்தான் நண்பர் செல்வரத்தினம்.

—சாதனைகள் சில சமயங்களில் நடுத்தெருவில்கூட அரும்பு கட்டலாம் என்பதை இப்பொழுது உணரக்கூடியதாக இருக்கிறது.

ஒரு நாள்.

ரஸ்தா ஓரம்.

பெரியகடைப் பக்கம்.

"நான் ஒரு சிறுகதைத் தொகுதி போடலாமென்று யோசிக்கிறேன்" சொன்னவர் 'செல்வா.' கேட்டுக்கொண்டிருந்தவன் நான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த இடத்தில் ஒன்றைக் கூறத்தான் வேண்டும். துணிச்சல் பேர்வழிகளை - சரியோ தப்போ, சுறுசுறுப்பாகவும், உற்சாகத்துடனும், மிகவும் தெஞ்சுரத்துடனும் காரியமாற்றுபவர்களை என் மனசுக்கு ரொம்ப ரொம்பப் பிடிக்கும். 'இதைச் செய்தால் சரியா? அதைச் செய்தால் சரியா?' என்று வியாபார ரீதியான மனப்பான்மையில் லாப நட்டக் கணக்குப் போட்டுப்பார்த்து, தண்ணீருக்குள் காலை வைக்காமலே நீந்தக் கற்றுத்தரும் பிரகஸ்பதிகள் அதிகமாக உலவிவரும் இந்த இலக்கிய உலகில், முன்பின் இலக்கிய வட்டாரத்தில் அதிகம் பேரடிபடாத ஓர் இளம் எழுத்தாள நண்பர், தான் எழுதியவற்றைத் தொகுத்துச் சிறுகதைத் தொகுதி ஒன்று போடப்போகிறேன் என்று சொன்னதும், எனக்கு அவரை மிகமிகப் பிடித்துப்போய்விட்டது. அவரை என்று சொல்வதைவிட அவரது துணிச்சலை என்றே குறிப்பிடலாம்.

அவருடைய துணிச்சலும் காரிய சாத்தியமான சாதனையின் அறுவடையுமே இச் சிறுகதைத் தொகுதி.

அன்று அரும்பான, இன்று செயல் உருவத்தில் சிறுகதைத் தொகுதியாய் காட்சிதரும் இந்நூலை நீங்கள் இதோ படித்துக் கொண்டிருக்கிறீர்கள்.

அதற்கு நான் முன்னுரை எழுதுகிறேன்.

"பசி" இலக்கியப் புளிச்சல் ஏப்பக்காரர்களை சிந்திக்க வைக்கக் கூடியது... "அவனும் மனிதன்" சாக்கடை நெஞ்சத்தில்கூட மனிதாபிமானம் பிறக்கலாம் என்பதைக் கூறுகின்றது. "வெறியும் உணர்வும்" தசைவெறியின் கீழ்த்தர முடிவைச் சித்தரிக்கின்றது. "மனிதப் பிறவி" ஒரு கவளம் சோற்றுக்காக போராடும் மனிதன், மனிதனுக்காக தனது



ஒரு கவளத்தையுமே தியாகம் செய்வதை எடுத்துக் காட்டுகின்றது. "பரம்பரைக் குரல்" மனித உயிர்கள் வறுமையால் பரம்பரை ஒன்றையே சிருஷ்டிப்பதைச் சொல்லுகின்றது. "பட்டினி" வயிற்றுக்காக மனிதன் செய்யும் சிறு தவறுகள் கூட சமூக அரங்கில் விஸ்வரூபம் எடுக்கும் கொடுமையைக் காட்டுகிறது.

இவைதான் ஆறு கதைகளும்.

உழைப்பவனை எவன் மதிக்கிறானோ, உழைப்பவன் எவனை மதிக்கிறானோ அவன்தான் மனிதன்; அதுதான் மானிடம். அவன் படைப்பதுதான் நிலைக்கும்; வாழும்; வளரும். அது கலையாக இருந்தாலும் சரிதான் அல்லது கருத்தாக இருந்தாலும் சரிதான்.

இவர் நமது அணியை சேர்ந்தவர் என்று பாத்தியதை கொண்டாடி ஞானஸ்நானம் செய்வித்து தூக்கி நிறுத்தி வைத்துப்பேச நான் தயாராக இல்லை. அது காலம் செய்யக் கூடியதேவலை.

இருந்தும் நாங்கள் எதை நோக்கிப் போகிறோமோ, மகாவேள்வி யாத்திரை செய்கிறோமோ; அந்தப்பாதையின் தடத்தை இவர் புரிந்து கொண்டார். தெரிந்து அதே பாதையில் நடக்கத் தொடங்கியுள்ளார். என்றே திட்டமாக சொல்லத் தோன்றுகின்றது.

டொமினிக் ஜீவா

60, கஸ்தூரியார் வீதி.
யாழ்ப்பாணம்.
21-10-62

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போகு முன் ... ...

பக்கத்தைப் புரட்டுகிறீர்களா ? எனிந்த அவசரம் ? கொஞ்சம் பொறுங்கள் ! இரண்டொரு வார்த்தைகள் மனம் விட்டுத்தான் பேசலாமே. உள்ளே தான் யாரைக் காணப் போகிறீர்கள் ? எல்லாம் எனக்கும் உங்களுக்கும் தெரிந்தவர்கள் தான். பைத்தியக்காரர்கள், பசி கொண்டவர்கள் வெறி பிடித்தவர்கள், பட்டினிக் குடும்பத்தினர் பரம்பரைப் பிச்சைக்காரர்கள் இவர்கள் தான் ; இவர்களைத்தான்.

என் உதட்டைப் பிதுக்குகிறீர்கள்...?

நான் என்ன செய்வது? “உலகம் செத்துக்கொண்டிருக்கிறது. மக்களெல்லாரும் சாவோடு போராடிக் கொண்டிருக்கிறார்கள்” என்று யாரோ ஒரு மேதை சொன்னாராம். சொல்லட்டுமே! எனது அநுபவங்கள், நான் காணும் உலகம், என்னைச் சூழ்ந்து நடப்பவர்கள், ‘மனிதன் சாவுக்குத் தன்னைத் தயார்பண்ணிக் கொண்டிருக்கிறான்.’ என்று எனக்கு அறிவுரை சொன்னவர்களை விட “வாழ்வுக்காக போராடிக்கொண்டிருக்கிறான், வாழ்வில் தன் நேசமுத்திரையைப் பொறித்துக் கொண்டிருக்கின்றான்.” என எனக்கு புதுவுரை போதிக்கின்றன. இதை நான் உணர்ந்ததன் விளைவே இச் சிறுகதைப் படைப்பு.

கவர்ச்சி நிறை மங்கையரின் அழகுக் கன்னங்களை, உதிரநிறத்ததரங்களை, துவண்டு விழும் துடியிடையை, தெள்ளு தமிழில்; தேனூறும் சொற் பரப்பி, அள்ளும் உணர்ச்சிகளை ஆங்கே குழைத்துவிட்டு; பள்ளிகளில், வீடுகளில், வீதிகளில், வித்தான்றி, படமாளிகையில், பஸ்நிலையங்களில் வளர்ந்து, பாண்கிணற்றில், முழக்கயிற்றில், பொலிடோல் திராவகத்தில் முடிவடையும் பண்பமைந்த காதலினை...



மேட்டுத் தெருவினரின் மேன்மாடி விளையாட்டை...

கூடிக் களிக்கும் அவர் தம் குலவித்தைக் கூப்பாட்டை...

மேனாட்டுப் பேனாவில் கருநிறத்து மை நிரப்பி. கதை கதையாய் எழுதுதற்கு என்கரத்தினிற்கு வலிமையில்லை.

போராடும் இவ்வுலகத்தில் பூப்பறிக்கும் வேலைகளைப் புன்னகையால் வரவேற்க என் மனசுக்கு இசைவில்லை. எதிர் பார்த்தோர் ஏமாந்தீர்.

எனக்குத் தெரிந்தவர்களெல்லாம் இவர்கள் தான். நான் அறியாத ஆண்டவனை, தெரியாத மன்னர்களை, புரியாத பிரபுத்துவ வாழ்க்கையை, வடித்தெடுத்து கதை சமைக்க எப்படித்தான் முடியும்...?

இது மனிதனே சகலவற்றையும் மாற்றியமைக்கும் சகாப்தமாயிற்றே...!

“உலகத்தின் கலைச் செல்வங்களெல்லாம் கைகளிலும் கால்களிலும் சேறுபடிந்த மக்கள் மத்தியில் தான் மண்டிக் கிடக்கின்றன.” என்ற மகாகவி தாகூர் என்ன முட்டாளா.....?

அப்படியானால் நானும் முட்டாளாகிவிடத்தான் விரும்புகிறேன்.

கோபுரமேறி இலக்கியம் படைக்கும் கோமான்களுடன் சேர்ந்து அதிமேதையாகிவிட நான் விரும்பவில்லை.

சுருக்கமாகச் சொன்னால் எனக்கு கதை எழுதத் தெரியாது.

வாழ்க்கைப் போராட்டத்திற்கு தம்மை ஈடு கொடுத்து வாடி நிற்கும் ஜீவன்களைப் பாத்திரங்களாக்கி, அவர் தம் உணர்ச்சிக் குமுறல்களை சொற்களில் வடித்து, போராட்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சம்பவங்களைக் கோவைப்படுத்தி கதைகளாகச் சமைத்திருக்கிறேன்.

பஞ்சையும் பயித்தியமும் பட்டினியும் மனிதப்பிறவிகளாக மதிக்கப்பட்டு கதையரங்கில் சதிராடினால் மாத்திரம் போதுமா...?

வாழ்வில்...?

செங்கதிரின் சுடரொளி ஙாகமறைப்பைத் தாண்டி மேகவெளியில் பிராகாசிப்பதைப் பார்க்கிறேன்?

நாளை... ?

காலம் ஒரு நாள் மாறத்தான் போகிறது!

இறுதியாக—

என்னை எனக்கே அறிமுகம் செய்த தமிழ்ச்செல்வர் வ. கந்தசாமி, நூல் உருப்பெற ஊக்கம்தந்த சு. மகாலிங்கம் (தலைவர் இ. எ. ச.) சு. துரைசிங்கம் (பொருளாளர் இ. எ. ச.) சிறப்புரை அளித்த பிரபல சிறுகதை எழுத்தாளர் டொமினிக் ஜீவா, பிரதி செய்து உதவிய க. விஜயகுமார், திருமதி சபாரத்தினம், என் சிருஷ்டிகளை வெளியிட்ட 'தமிழன்', 'தமிழ் முரசு', 'பூங்கா' ஆகிய பத்திரிகைகளின் ஆசிரியர்கள், முகப்புச் சித்திரம் வரைந்த ஓவிய நண்பர் கைலாசபதி, அழகிய முறையில் அச்சிட்டுதவிய தமிழ்நாடு அச்சகத்தார், ஆதரவு தரும் வாசகர்கள் ஆகிய அனைவருக்கும் நன்றிப்பெருக்கால் தனித்தனியே தலைசாய்த்து வணங்குகிறேன்.

வணக்கம்.

**மாதகல் செல்வா**

வில்வளை,
மாதகல்,
21-10-62

# பதிப்புரை

இளம் எழுத்தாளர் சங்கத்தின் முதல் வெளியீடாக ஊக்கமும், உற்சாகமும், துணிச்சலும் மிகக் கொண்ட "**மாதகல் செல்வா**" அவர்களின் "**பசி**" சிறுகதைத் தொகுதியை வெளியிடுவதில் மகிழ்வெய்துகிறோம்.

பல வளர்ந்த எழுத்தாளர்களே தங்கள் எழுத்துக்களை தன்னம்பிக்கைக் குறைவினாலோ என்னவோ நூல் வடிவாக்காத, ஆக்கமுடியாத நிலையில் இளம் எழுத்தாளன் ஒருவன் தனது சிருஷ்டிகளை இலக்கிய உலகிற்கு நூல் வடிவமாகப் படைப்பதில் ஏன் பெருமையடையக்கூடாது? அந்தப் பெருமையில் சங்கம் ஏன் பங்குகொள்ளக்கூடாது? அந்தப் பங்கைச் சங்கம் ஏற்றுக்கொண்டது!

எமது மகிழ்ச்சி, எங்கள் பெருமை, உங்களுக்கும் திருப்தியளிக்கும் என்ற நம்பிக்கையில் இந்த நூலை வெளியிடுகின்றோம். இலக்கிய உலகிற்கு நாம் தந்த முதல் முயற்சியின் அறுவடையை கணிப்பதும், கொள்வதும் இனி உங்கள் பொறுப்பல்லவா?

**சு. மகாலிங்கம்**
தலைவர்,
இளம் எழுத்தாளர் சங்கம்.

127, ஸ்டான்லி வீதி,
யாழ்ப்பாணம்,
30-10-62.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணிக்கை

'ஆனு' என்றே அழித்தழித்து மண்மேல்
ஆயிரம் முறை தேனூர் தமிழில் ஓர் எழுத்தை
நான் தானுய் எழுதக் கற்றுத் தந்த தாய்
தமக்கே என் இதயக் காணிக்கை.

## உள்ளே:


1. பசி .... 9
2. அவனும் மனிதன் .... 23
3. வெறியும் உணர்வும் 36
4. மனிதப் பிறவி .... 49
5. பரம்பரைக் குரல் .... 61
6. பட்டினி .... 73


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பசி

**"உலகில் பலருக்குப் பலவித பசி;**
**ஆனால் அவனுக்கிருப்பதெல்லாம்**
**ஒரே பசி,... வாழ்வுப் பசி."**

எழுத்தாளர் ஏரம்பமூர்த்தி எக்ஸ்பிரஸ் ஹோட்டலை விட்டு ஏப்பத்தோடு வெளியேறிக் கொண்டிருந்தார்...

அவருக்குப் பசி!

என்ன திகைக்கிறீர்களா? ஆம், அவருக்குப் பசியேதான்—தணியாத பசி. தீர்க்கமுடியாத பசி, இற்றைக்குப் பதினைந்து ஆண்டுகட்கு முன் ஆரம்பித்த பசி, இன்னும் தணிவதாக இல்லையே! இப்போதான் மூக்கு முட்டும் வரை இட்லி சட்னியோடு முட்டி மோதிக்கொண்டிருந்தாரே இன்னுமா தணியவில்லை? ஹோட்டலால் தீர்க்கக் கூடியது வயிற்றுப் பசியல்லவா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவருக்கிருப்பது அதுவல்லவே. அவருக்கிருப்பதெல்லாம் ஒரே பசி!— கதைப் பசி! எப்படியாவது உருப்படியாக ஒரு கதை எழுதித் தீர்த்துவிடவேண்டும்.

ஏறுநடை போடுகிறார் ஏரம்பமூர்த்தி. அவர் முகத்தில் எழுத்தாளர்களுக்குரிய களை சொட்டுகிறது. அழுக்கின் ஆக்கிரமிப்புக்கு ஆளாகியிருக்கும் காசனல். அதை அரைவாசிக்குமேல் மறைத்துக் கொண்டிருக்கும் பழைய பட்டுச் சால்வை; மைக்கறை படிந்த வேட்டி; காந்திச் செருப்பு; தனக்கென பெரிய சரித்திரம் கொண்ட பைல் கட்டு; அதிற் புகுந்திருக்கும் பேப்பர்க் கற்றை; பேர் தெரியாத பேனா இவையெல்லாம் அவரிடம் குடியேறி ஆண்டுகள் பல சென்றுவிட்டன.

நடந்தே பழகியகால், தன்னால் நடக்கிறது, "அரசடி" நின்றுவிட்டார், அதுதான் அவருடைய 'ஆபீஸ்.' பைல் கட்டு அவிழ்கிறது.

அவர் முன்...

'சிறுகதை எழுதுவது எப்படி?' 'தொடர் கதை எழுதுவது எப்படி?' 'நாவல் எழுதுவது எப்படி?'' என்றிப்படிப் பெயர்பெற்ற பல புத்தகங்கள். ஒவ்வொன்றாகப் புரட்டுகிறார். எதிலுமே அவருக்குத் திருப்தியில்லை. உதட்டைப் பிதுக்கிக்கொண்டே தான் முன்பு எழுதித் தீர்த்துவிட்ட கதைகளை ஒன்றுவிடாமல் திருப்புகின்றார்.

முயற் கதையிலிருந்து நரிக்கதை வரையில் பார்த்துத் தீர்த்துவிட்டார். எதுவுமே பயனற்றதாகப்படவே, பக்கத்தில் கிடந்த குப்பைக் கிடங்கை முத்தமிடுகின்றன அவை, மீதமுள்ளதெல்லாம் பத்துப் பதினைந்து வெற்றுக் கடுதாசி



தான். அவருடைய நாற்பது வருட வாழ்க்கையிலே சம்பாதித்ததெல்லாம் வயிற்றிற்குப்போக அந்தப் பேப்பர்க் கட்டுத்தானே அவர் கண்ட சொத்து. அதுவும் தீர்ந்துவிட்டால் எழுத்துலக வாழ்வே அஸ்தமித்துவிடும்! கவலையின் குறிகள் அவர் முகத்தில் படர்கின்றன.

சற்றுநேரத்திற்கெல்லாம் யாரோ அந்தப்பக்கம் வருவதுபோல் தென்படவே, தலைநிமிர்ந்து பார்த்தார். முன்னுக்கு நடந்துகொண்டிருந்தது ஒரு "பைத்தியம்" அதைப் பின்தொடர்ந்து ஓர் இளைஞன்.

எழுத்தாளர் ஏரம்பமூர்த்தியின் முகம் மலர்கிறது, பசியால் துடித்தவன் வாயில் பஞ்சாமிர்தம் விழுவது போல, கதைப்பசி கொண்டலைந்த ஏரம்பமூர்த்தியின் முன் இளம் எழுத்தாளன் சுந்தரம் வந்துகொண்டிருந்தான்.

"தம்பி....!' 'இஞ்சை வா !!...." அழைத்தார்" ஏரம்பமூர்த்தி.

"என்னையா! எழுத்தாளரே என்ன விஷயம்...?

"இஞ்சை வா மேனை, கோவிக்காதை. இப்பிடிக் கல்லிலையிரு. நீ நாலு கதை எழுதினவுடனை பெரியவனாய் விட்டாய்...... நான் வரியம் பன்னிரண்டு மாதமும் எழுதிறன்—ஒண்டுமாய் பிடிபடேல்லை, இதுக்கென்ன செய்யலாம் எண்டு சொல்லிப் போட்டுப் போ......"

"அதிலை ஒண்டுமில்லை ஐயா!...... நீங்கள் இன்னும் அந்தக் காலத்திலை நிக்கிறியள்......"

"அப்படி எண்டால்......"

"நாய்க்கும் நரிக்கும், ஆமைக்கும் முயலுக்கும் கதை எழுதிறியள்......"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வேறை என்னத்துக்கு தம்பி எழுதுறது......?

"மனிசரைப்பற்றி எழுதவேண்டும் — அப்பதான் இந்தக்காலத்திலை மவுசு......"

"மனிசரைப்பற்றி என்னண்டு காணும எழுதுறது? மனிசரிலை என்ன கிடக்கு எழுதுறதுக்கு......?"

"கோவியாதையுங்கோ ஐயா.... எனக்கு முன்னாலை போனானே ஒருவன் அவன் ஆர் தெரியுமே?

அவனை விடு காணும் அவனொரு பைத்தியம்...."

"அந்தப் பைத்தியத்துக்கைதான் உங்கடை பசி தீர்க்கக்கூடிய வைத்தியமும் இருக்கு; அவன் முந்தி எப்படி இருந்தான் தெரியுமோ....?

"றிக்சா இழுத்த சொக்கனை தெரியாதமாதிரியல்லோ கேக்கிறாய்....?"

"அவனுக்கேன் பைத்தியம் வந்தது, முந்தி நல்லாத் தானே இருந்தவன்....?"

"எனக்குத் தெரியுமோ....?"

"அங்கைதான் புதைஞ்சு கிடக்கு பெரிய கதை...."

"கெதியாய்ச் சொல்லும் தம்பி உதையாகுதல் எழுதித் தள்ளுவம்...." அங்கலாய்த்துக் கொண்டே பேனாவைத் திறந்தார் எழுத்தாளர் ஏரம்பமூர்த்தி.

அதோ! அந்த உருவம் வெறிச்சோடிப்போன அந்த வானத்தில் எதைத்தான் அப்படி வெறிக்க வெறிக்கப் பார்க்கிறானோ? பஞ்சடைந்த கண்கள் — ஆழக் குழியில் பதுங்கிக் கிடக்கின்றன. நெற்றியில் கவலையின் குறிகள் நெளிந்தாடுகின்றன. முகத்திலே துயர ரேகைகள் படர்ந்



திருக்கின்றன. தலையை இறுகப் பிடித்துக்கொண்டு ஆழ்ந்த சிந்தனையில் ஆமிழ்ந்திருக்கும் பரிதாபகரமான கோலம்; அவன் ஏதோ சொல்லமுடியாத துயரிலே சிக்கி, வேதனை வெள்ளத்திலே தடுமாறுவதைப் பறைசாற்றுகிறதே....!

'ஹி... ஹி... ஹி... ஹி...' சிரிக்கிறான்

எதைக்கண்டு சிரிக்கிறான்....?

ஏன் சிரிக்கிறான்....?

இந்தப் பைத்தியக்கார உலகத்தைப் பார்த்துச் சிரிக்கிறானா?...... பல்லிளிக்கிறானே யாராவது பிச்சை போடுவார்களென்று?...... அது அவன் தொழிலல்லவே.

அன்று கபடமற்ற அந்தச் சிரிப்பிலேதான் அவன் வாழ்க்கையே உருண்டு சென்றது.

* * * *

ஆம் — அவன் வாழ்க்கையே விசித்திரமானது. மறைந்தொழிந்த நேற்றைய பற்றி அவன் சிந்தித்ததே கிடையாது. நிகழப்போகும் மறுநாளைப்பற்றித் துளிகூட எண்ணுவதுமில்லை. அன்றாடப் பொழுதை எப்படியாவது தட்டிக்கழித்து விடவேண்டும் என்பது அவன் வாழ்க்கையின் குறிக்கோளாக இருந்தது.

கதிரவனின் ஒளிக்கற்றைகள் முற்றத்தில் விழுந்தது தான் தாமதம், தனது "றிக்சா" வண்டிசகிதம் பஸ் நிலையம் கடந்து ஆஸ்பத்திரி வீதியை அடைந்துவிடுவான். ஏதாவது சவாரி கிடைத்தால் அவன் குடும்பத்தின் பொழுது ஒரு மாதிரிக் கழியும். இல்லாவிட்டால் குடிசையில் அடுப்புப் புகையாது. சவாரி கிடைக்காத நாட்களில் "டாக்சி"கள் மீது சபித்துக்கொண்டே செல்வான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ன இருந்தாலும் தினப்படி இரண்டோ, மூன்றோ சம்பாதித்து விடுவான். அதில் செலவுபோக மீதமுள்ள பணத்திற்கு அரிசி வாங்கிக்கொண்டு சிரித்த முகத்துடன் வீட்டிற்குப் போய்விடுவது அவன் வழக்கம்.

“சொக்கனின் வாழ்க்கை” என்ற நாவலில் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு அத்தியாயமாக அமைந்திருந்தது. அவற்றைப் புரட்டிப் பார்க்கும்போது பல பக்கங்கள் அந்த ஏழை விட்ட கண்ணீரால் நனைந்திருப்பதைக் காண முடியும்.

அன்று —

கோழி கூவும் என்று எதிர்பார்க்காமலே கதிரவன் எழுந்து வர எத்தனித்தான். கூடவே சொக்கனும் சோர்வை முறித்துக்கொண்டு எழுந்தான்; படுத்திருந்த ஓலைத் தடுக்கைத் தூக்கி சுருட்டிக் கட்டிலுக்கடியில் தள்ளி விட்டு நிமிர்ந்தான்.

“உம்.... உம்.... உம்.... அப்பு....” தோல் போர்த்திய எலும்புக் கூடொன்று முனகிற்று. கட்டிலோடு கட்டிலாக ஒட்டிப்போய்க் கிடந்த தன்னருமைச் செல்வத்தைக் குனிந்து பார்க்கிறான். அவனையறியாமல் அவன் கண்கள் கலங்குகின்றன. எதிரில் கிடந்த கஞ்சிக் கிண்ணத்தை அதன் வாயில் வைத்துப் பருக்கிவிட்டு விடைபெற்றுக் கொண்டு வெளியேறுகிறான்.

கணவனுக்கு வேண்டிய உதவிகளையெல்லாம் செய்து கொடுத்துவிட்டு, கதவோடு கதவாக வந்துநின்று அவன் போவதைப் பார்த்துக் கொண்டிருந்தாள், பொன்னம்மா.



“பொன்னு! வீட்டைக் கவனமாய்ப் பாத்திரணே; செல்வம் கவனம்...... நான் பொழுதுபடத்தான் திரும்புவன்.”

“இப்பிடி வெறுவயிற்றோடை போறியே நீ வந்துதானே உலை வைக்க வேணும்....”

“இண்டைக்குத்தானோ இந்த வயிறு வெறுமனே கிடக்கு....?” என்று கலகலவெனச் சிரித்தான். எளிதில் கிடைக்கும் அந்தச் சிரிப்பு ஒன்றுதான் அந்த ஏழை “றிக்சா” ஓட்டியின் ஒரே சொத்து.

மறுகணம் அவன் முகம் விகாரப்பட்டது. எங்கேயோ ஒழித்திருந்த பசி அவன் அடிவயிற்றைக் கிள்ளிவிட்டுச் சிரித்தது.

“சரி நான் போட்டுவாறன்” என்று சொல்லிக் கொண்டே தன் தோளில் தொங்கிய அழுக்குத் துண்டை தலையிலே சுற்றிவிட்டு றிக்சாவை இழுத்துக்கொண்டு நடந்தான்.

அன்று அவன் வருகைக்காகக் காத்திருந்தது ஒரு சவாரி. அது மனிதப் பிறவியல்ல ஒரு மிருகம்! அடி பட்டு நொண்டிப் போயிருந்த ‘அல்சேசன்’ நாயுடன் விழிகளை நாலா பக்கமும் ஓட்டிக்கொண்டு நடைவழியில் நின்று கொண்டிருந்தார், ஒரு பெரியவர்.

சொக்கன் வண்டியை அவர் அருகில் நிறுத்தி எக்கமும் அவாவும் கலந்த விழிகளால் அப் பெரியவரைப் பணிவுடன் நோக்கினான்.

“வாறியா?” என்று அவர் கேட்டதும் சொக்கனின் வயிறு குளிர்ந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஏறுங்கையா....!" என்றான், உள்ளத்தில் மகிழ்ச்சி துள்ள.

"றெயில்வே ஸ்டேசன் வரைக்கும் போக வேணும் எவ்வளவு கேட்கிற?"

"ஏதோ குடுங்கையா, இப்பத்தான் வண்டியை எடுத்துக்கொண்டு வாறேன். கைவியளம் நீங்கதானே" என்று சொல்லிக்கொண்டே அவர் அருகில் றிக்சாவை நிறுத்தினான்.

அன்றைக்கு அந்த ஜீவனின் முதற் சவாரியில் ஏறிக் கொண்டது அல்சேசன் நாய்தான். அதற்குப் பக்கத்தில் ஏறியிருந்த பெரியவர் "கெதியாய்ப் போ....!" என்று உத்தரவு கொடுத்துவிட்டு, கைக்குட்டையால் நாயின் முகத்தைத் துடைத்தார்.

மிருகத்தையும் மனிதனையும் ஓரே ஆசனத்தில் வைத்து இழுத்து சென்றது அந்த மனித மிருகம்.

மேல் மூச்சுக் கீழ் மூச்சு வாங்க, மேனியெல்லாம் வியர்வை வெள்ளம் கரைபுரண்டோட, ஸ்டேசனைக் கடந்து வந்து ஒரு பெரிய மாளிகையின் முன் நின்றது வண்டி.

வண்டியை விட்டு இறங்கிய பெரியவர் "டைகர், வாம்மா.." என்று அன்பொழுக தன் செல்வத்தை இறக்கிவிட்டுப் பையில் இருந்து ஐம்பது சதத்தை எடுத்து சொக்கனிடம் நீட்டினார். அதை பெற்றுக்கொள்ள அந்த றிக்சா ஓட்டியின் கரங்கள் தயங்கியபோது தலையை திருப்பிக்கொள்ளத் தவறவில்லைப் பெரியவர்.

"பார்த்துக் கொடுங்கையா... நாயை ஏற்றிக் கொண்டு வந்த ஜீவன் ஐயா..." என்று இறைஞ்சினான்.



"அதெல்லாம் எனக்குத் தெரியாது இவ்வளவுதான் கொடுப்பேன்" என்றார் கண்டிப்புடன் பெரியவர்.

"ஒரு கால் ரூபா போட்டுக் கொடுங்கையா"

"றிக்சாக்காரர் விசயம் எனக்குத் தெரியாமலில்லை. இதுக்கு மேலே ஒரு செப்புக்காசும் கொடுக்க முடியாது" பெரியவர் பேச்சில் கோபம் கொப்பளித்தது.

"ஏழையின் வயிற்றில் அடிக்காதிங்கையா... ஒரு பதினைந்து சதம் போட்டுக் கொடுங்கையா" வழிகின்ற வியர்வையை துடைத்துக்கொண்டே சொன்னான் சொக்கன்.

"முடியவே முடியாது" என்று ஆவேசத்தோடு அலறி விட்டு ஐம்பது சதத்தை "றிக்சா"வில் வீசி எறிந்து விட்டு விரைந்து கொண்டிருந்தார் பெரியவர்.

ஏழைச் சொக்கனின் கண்கள் கலங்கின. அது வியர்வையுடன் கலந்து உருமாறிக் கொண்டே சென்றது. ஒட்டி உலர்ந்து போய்க்கிடந்த வயிற்றை ஒரு முறை பார்த்துக் கொண்டான். அது முள்ளந் தண்டுடன் ஒட்டி உறவாடிக் கொண்டிருந்தது. ஐம்பது சதத்தை எடுத்து மடியில் செருகி விட்டு தள்ளாடியவாறே "றிக்சா"வை ஒரு பக்கமாக இழுத்து நிறுத்திவிட்டு ஏதாவது சவாரி கிடைக்கின்றதா என்று எதிர்பார்த்துக் கொண்டிருந்தான். டாக்சிகளும் கார்களும் மலிந்துவிட்ட இந்த நாளில் அவன் ஓட்டம் எம்மாத்திரம்?

நேரம் பகல் பன்னிரண்டு என்பதை மணிக்கூட்டுக் கோபுரம் நகரமக்களுக்குச் சொல்லிக் கொண்டிருந்தது. நா ஈரப்பசுமையற்று வரண்டுபோக, தலை கிறுகிறுக்க, கால் தள்ளாட, உடலிலே வலுவின்றி இழுத்துவந்தவெற்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றிக்சாவை சாலையின் ஒருபக்கத்திலே நிறுத்திவிட்டு அதில் தன்னுடலைச் சாத்திக் கொண்டான் அவன்.

அப்பொழுது...

“அடோ... யாருடா அவன்... எழும்டா... ரிக்ஷா நிப்பாட்டுற இடங்... தெரியாது...?” என கொச்சை மொழியில் அதட்டிக் கொண்டே வந்தான் ஒரு பொலீஸ் காரன்.

சக்தியற்ற நிலையில் எழுந்து நின்றான் சொக்கன்.

“டேய் என்னுடா முளிக்கிறே? றிக்சா இங்கு யாருடா நிப்பாட்டச் சொன்னது? உங்களை சும்மா விடக்கூடாது வாடா ஸ்டேசனுக்கு...” கடமையின் காவலன் அழைப்பு விட்டான்.

அப்பொழுது அவன் கையில் இருந்த பணத்தைக் கொடுத்திருந்தால் அவனிடம் இருந்து தப்பிக்கொண்டிருப் பான். ஆனால், வீட்டில் அடுப்புப்புகையாதே என்பதை நினைத்தபோது கொடுக்கமறுத்தது அவன் உள்ளம். ஆகவே அவனுக்குப்பின் நடந்தான்.

மறுநாள்...

குற்றப் பணத்தைக் கொடுக்க வக்கற்ற சொக்கன் ஒரு மாதத்திற்குச் சிறைக் கூடத்துக்குள் புகுத்தப்பட்டான்.

நாட்கள் சில கடந்து சென்றன.

சொக்கனின் வீடு இருள் சூழ்ந்தது. பொன்னம்மா வேலை தேடி அலைந்தாள். உள்ளவேலைக்கே ஆள்ப்போட்டி இருக்கும்போது அவள் எம்மாத்திரம்?

முதலாளிகளைக் கெஞ்சினாள். ஏதாவது கூட்டத் துடைக்கவாயினும் கிடைக்குமென்று!



“படித்தாயா? பட்டம் பெற்றாயா?” என்று கேட்டு நின்றது சமுதாயம்.

வாழ்க்கையென்ற அத்தியாயத்திலே துன்ப இருள் என்னும் அரைப்பங்கைத் தான் படித்திருந்தாள் அவள்.

“சீ நாயே...! போ கழுதை...!” இவற்றைத் தவிர சமுதாயத்தில் வேறு பட்டங்கள் அவள் பெற்றிருக்கவில்லை. தெருத் தெருவாக அலைந்து பிச்சை கேட்டாள். அது வும் எத்தனை நாளைக்குத்தான்?

அவள் தன் ஒரே செல்வத்தின் வாழ்வுக்கு நிலைதேடி ஓடினாள் ஆனால்... சமூகம் அவள் உடலுக்கு விலைகேட்டு நின்றது.

நாட்கள் கடந்தன, மூன்று நாட்களாக வீட்டிலே அடுப்புப் பற்றவில்லை அந்த இடத்திலே பூனை தன் படுக் கையை அமைத்துக்கொண்டது.

கட்டிலிலே உயிர்போகும் நிலையில் பசியால் துடித் துக் கொண்டிருந்தான் செல்வம் — பொன்னம்மா துடி துடித்தாள். பதைபதைத்த அவள் சரியாகச் சாப்பிட்டு இன்றுடன் பத்துநாட்கள் பூர்த்தியாகின்றன.

மறுநாள் திங்கட்கிழமை.

அவள் இந்த உலகத்திலே உருப்படியாகத்தான் பிறந் தாள் ஆனால்... இன்று உருக்குலைந்து கொண்டே போகி றாள். நேற்றுவரை அவள் உடல் ஒருவனுக்குத்தான் சொந்தம் ஆனால் இன்று...?

* * * *

விடுதலை அடைந்த சொக்கன், தன் ஆசை மனைவி பொன்னம்மாவை, அருமைச் செல்வத்தை காண வேண்டும் என்ற ஆவலுடன் ஓடோடி வந்தான்.

பூட்டப்பட்ட கதவு அவனைத் தடுத்து நிறுத்தியது.

"பொன்னு... பொன்னு..." அன்போடு கூப்பிட்டான். அந்தக் குரலில் இருந்த பலவீனத்தை உள்ளிருந்தபடியே புரிந்துகொண்டாள் பொன்னு. ஆனல் எந்த விதமான பதிலையும் கொடுக்க முடியவில்லை அவளால்.

கதவை இடிக்கும் சத்தம் அவள் காதுகளில் பலமாகவே கேட்டது. அதைவிடப் பலமான கைகளுக்கிடையில் அவள்...? வெளியில் இருந்தபடியே துடித்தான் அவன்! உள்ளிருந்தபடியே துவண்டாள் அவள்!

குலைக்கப்பட்ட கூந்தல், கலைக்கப்பட்ட ஆடை, இரண்டொரு எச்சிற்றுளிகள் இதுதான் அவள் கண்ட மிச்சம்.

"பொன்னு... பொன்னு..." இப்போது அவன் குரலிலே கனிவில்லை. வெம்று கர்ஜனை...

தனக்கிருந்த உடற்பசியைப் பூர்த்தியாக்கிக்கொண்டவன் அவளினதும், செல்வத்தினதும், வயிற்றுப்பசியைப் போக்கப் பணம் கொடுத்துவிட்டுப் பின்புறமாக வெளியேறினன். அவள் எழுந்து கதவைத் திறந்தாள்.

**"பொன்னு... நீ...!"** அவன் இதயத்தின் அடித்தளத்தில் இருந்து எழுந்த ஒலி அது...

"படுத்திருந்தேன்..."



"இல்லை உன் வெறியைப் பூர்த்தியாக்கிக்கொண்டிருந்தாய். எடி... நாயே..." என்று அவள் கழுத்துக்கு நேராகக் கையைக் கொண்டு போனன்.

அவள் வயிற்றைக்காட்டி பசியென்று பதறினள்... பதைபதைத்தாள்...

அவன் அவள் குரல் வளையை அழுத்தமாகப் பிடித்து நெரித்தான். அப்பொழுது அவன் முன்னே விழுந்தது ஒரு சொல் "பசி"—அவன் கைகள் நடுங்கின... திரும்பினன் செல்வத்தின இறுதிமூச்சு அமைதியாகச் சொன்று கொண்டிருந்தது.

அவன் கைகளை விட்டசமயத்தில் கொடிபோலத் துவண்டு விழுந்தாள் பொன்னம்மா.

சொக்கன் தனியானன்...

அதற்குமேல் அவனல் அங்கு நிற்க முடியவில்லை. வீட்டை விட்டு வெளியேறினன்.

புயல் வேகத்தில் நடந்தான். அப்போது மணி பன்னிரண்டு. வீட்டையும் வீதியையும் கடந்து நடந்துகொண்டே இருந்தான். அப்போது அவன் முன்னே வந்து நின்றது அவள் சொன்ன சொல் "பசி" அந்தச் சொல்லை நினைத்து "ஓ" வென அழுதான்! ஆறுதல் சொல்ல யார் இருக்கிறார்கள். அவனைத் தவிர.

நடந்தவன் ஓடினன் ஓரத்தை நோக்கி... அழுதவன் சிரித்தான் உலகத்தை பார்த்து.

அதுதான் உலகம் அவனிடம் இருந்து பெற்ற கடைசிச் சிரிப்பு.

* * * *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுத்தாளர் எரம்பர மூர்த்தி பேனாவை மூடிவைத்தார், அவர் முகத்திலே திருப்தியின் சாயல் தன் கதைப் பாத்திரங்களை ஒவ்வொன்றாக மனக்கண் முன் நிறுத்தினார்.

பொன்னம்மா அவளுக்கு பசி. வயுற்றுப் பசி. அது கூடத் தீர்ந்துவிடாம் அவன் கொடுத்த பணத்தால்.

அவன்...? அவனுக்கும் பசி தான். ஆம் உடற் பசி! அதுவும் தீர்ந்து விட்டதே அவள் உடன்பட்டபோது. தன்னைத்தானே ஒருமுறை உற்றுப்பார்த்தார் ஏகாம்பர மூர்த்தி.

அவர் பசியும் ஒரு வழியாகத் தீர்ந்து விட்டது !

தன் கதாநாயகன் சொக்கனை (பைத்தியத்தை) உன்னிப்போடு கவனித்தார்.

அவன் முகத்திலும் பசிக்களை சொட்டுகிறது.

ஆம்; சொக்கனுக்குள்ள தெல்லாம் ஒரேபசி; வாழ்வுப் பசி அதைத்தீர்த்து வைப்பது யார்...?

மிருக வாழ்க்கை நடத்துவர்கள் இதயத்திலும்
எங்கே ஓர் மூலையில்
மனிதவுணர்வு ஒட்டிக்கொண்டுதான் இருக்கிறது.
சந்தர்ப்பம் வரும்போது
அது விழித்துக்கொள்ளத் தயங்குவதே இல்லை.

# அவனும் மனிதன்

மாதகல் நாட்டிற்கு மகத்தான பல சரித்திரப் பெருமைகள் உண்டு. அத்துடன், நூற்றுக்கதிகமான கடாக்களையும் பலநூறு கோழிச் சேவல்களையும் ஒரே நாளிற் கொன்று குவித்து தின்று பசிறும் கும்பகர்ணத் தன்மை வாய்ந்த முனியப்பர் பெருமான் குடியிருக்கும் பதி என்பதில் அதற்கொரு தனிப் பெருமை பக்தகோடிகளிடம்.

அந்தப் பெருமைக்குரிய முனியப்பர் பெருமானின் வலக்கரம் தான் சண்டியன் சுப்பையன். அவருக்குரிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருமையில் அறுத்துப்படைக்கும் அவனுக்கு இல்லாமலா போகும்?

சுப்பையன் மாதகல் பெயர் போன சண்டியன்; மகா முரடனும் கூட. அவனுக்கிருக்கும் நடப்பை; பார்த்த சிறுவரெல்லாம் ஓடி ஒளிப்பதிலிருந்தும் கண்ட பெரியவரெல்லாம் பல்லிளிப்பதிலிருந்தும் தெரிந்துகொள்ளலாம். அவன் எடுப்பான தோற்றமும் மிடுக்கான நடையும் முறுக்கிய மீசையும் அவனுக்கிருந்த செல்வாக்கை அதிகப்படுத்தியதில் வியப்பில்லை.

சுப்பையன் வருகிறானென்றால் அழுகிறபிள்ளை நிறுத்தி விடுகிறது. அடம் பிடிக்கும் சிறுவன் அடங்கி விடுகிறான். தூங்க மறுக்கும் குழந்தை தூங்கிவிடுகிறது. அவ்வளவுக்கு அவன் மதிப்பு உயர்ந்திருந்தது.

நேற்றுத்தான் சுப்பையன் விடுதலை அடைந்தான்; இன்றுஊரே பரபரப்படைந்திருக்கிறது, காரணம்தெரியாத பீதி சிறுவர்கள் மத்தியில். எக்கும் ஒரே பேச்சு,

வேள்விக்கு நாள்நெருங்கி விட்டது. சென்ற வேள்வியில் நடந்த வேள்வி எதிர்ப்புப் போராட்டக் காரரை அடித்துக் காயப்படுத்தியதற்காகச் சிறை சென்றவன் இந்த வருட வேள்விக்குமுன் வந்துவிட்டான் என்பதனால் எதிர்ப்புக்காரர் மத்தியிலும் இனம்தெரியாத ஒரு பயம் எப்படியும் வேள்வியை நடத்தி விடுவான் என்பதால்.

சுப்பையன் சிறையில் வாடி, சித்திரவதை செய்யப்பட்டு, உள்ளமுடைந்து மிருகவேறி நீங்கி, பாவிமனிதனாக வெளிவருவான் என்றுதான் எல்லோரும் எதிர்பார்த்தார்கள். ஆனால்...



அவன் சிறையில் கிடந்து சிதைவுற்ற காலத்தில், உடலின் உரம் குறைய உள்ளத்தில் மிருக வெறியேறிக் கொண்டே வந்தது. அதனால் கொஞ்ச நஞ்சமாக இருந்த மனித உணர்வுகளும் உலர்ந்து உயிரற்றுப்போக, கொடிய மிருகமாக வெளிவந்தான்.

வந்த அன்றே மறுவேள்விக்கான ஆயத்தங்களைச் செய்வதில் ஈடுபட்டான். இன்றும் அதே வேலையாகத்தான் ஐயர் வீட்டைநோக்கிச் செல்கிறான்.

ஐயா...! ஐயா...!!

அதாரது...?

" அது நான்தான்..."

"நாளொண்டு......ஓ......ஓ...... சுப்பையாவே வா......வா......வா......இப்படிக் கதிரையிலே இரு...... நான் ஆரோவெண்டெல்லோ......"

அறுக்கொண்டுமில்லை........."

என்ன நல்லாக் களைச்சுப் போனாய்? என்ன விஷயம்?........"

"சும்மா தெரியாதே......உந்த வேள்வி விஷயமாய்த்தான்.........நானும் முந்தநாள்தான் வந்தனான்............ இந்த முறை வேள்வி வெள்ளி செவ்வாயிலே வருமெண்டு நினைக்கிறேன் எப்பவெண்டு ஒருக்காப் பார்த்துச் சொல்லுங்கோவன் "

" வாற வெள்ளிக்கிழமையளவில்தான் வருகுது. என்டாலும் உந்தச் சிறுசுகள் இந்த முறையும் ஏதேன் செய்யும் போல கிடக்கு........என்னவோ தெய்வகாரியம்...... அங்காலை உன்ரை விருப்பம்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" உந்தக் குஞ்சுகளைப் போனவரியமே நல்ல போடு போட்டுத் தலை எடுக்காமப் பண்ணிப்போடுவன் குமார் வந்து குழப்பிப்போட்டான். இந்த வரியம் ஏதென் சேட்டை கீட்டை விட்டேல் கதிரவேலும் நிக்கிறுன். ஆக் களை ஒரு மடக்கு மடக்கிப்போடுவம்."

" நீ இருக்கேக்கை உதுகள் என்ன செய்யும்"?

தக்கபடி ஐஸ் வைத்தார் ஐயர்.

" என்னவாம் சுப்பையா...... சுவாமி காரியம்......"

இந்த முறையும் என்ன செய்யுதுகளோ ?......" என்று சொல்லிக்கொண்டே கொண்டு வந்த தண்ணியை ஆளுக்கொரு பேணியோட சொடுத்து விட்டு மூலைச் சுவ ரோடை குந்தினுள் செல்லாச்சியம்மா.

சுப்பையன் இரண்டு மிடறிலை விழுங்கிப் போட்டு எதையோ தட்டிக்கப்பால் உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டிருந்தான்.

"உதென்ன சுப்பையா......" ஐயர் கேட்டார்.

உந்த நாய்க்குட்டியைத்தான்......"

" ஆள் நல்ல சடையன்......"

" நாங்களும் ஆசைப்பட்டாப் போலை வளர்க்கவெண்டு முருகேசு கொழும்பாலை கொண்டந்து தந்தது...... "

" ஆள் நல்ல சுழியன் எனக்கும் அதிலைதான் கண்..."

" நீ ஆசைப்பட்டதை எங்களுக்கேன் ? உனக்கும் எப் பேன் நாங்கள் மறுப்புச் சொன்னுங்களோ ? இருந்தாலும் எங்கடை சின்னவனுக்கும் உதிலைதான் விருப்பம்......" இழுத்தார் ஐயர்.



" இஞ்சேரும் உது பெரிய கரைச்சல். அடுப்படிக்கை உள்ளடுது......படுக்கேக்கை வருகுது. எப்பன் உதைச் சுப்பையாட்டை குடுத்து விடுங்கோ......"

தூபம் போட்டாள் அம்மா. சுப்பையா நாய்க்குட்டி யோடு வெளியேறினுன். ஐயருக்கும் அவனை வளைத்து வேள்வியை நடத்திவிடலாம் என்ட திருப்தி.

சுப்பையன் வீட்டில் வீமன் செல்லமாக வளர்க்கப் பட்டான்—ஆமாம் அதுதான் நாய்க்குட்டியின் பெயர். பாலையும் சோற்றையும் பருக்கினுன். அது வழு வழு என்று நிற்கும் அழகைப் பார்த்து உள்ளம் பூரித்தான். அது செல்ல நடைபோடும்போது தானும் அதுபோல் தவழ் ந்தான். அது செல்லக் குரைப்புக் குரைக்கும்போதெல் லாம் முழு மலடனுன அவன் தனக்கு ஒரு மகன் பிறந்து மழலை மொழி பேசுவதாகவே கருதி உள்ளம் மகிழ்ந்தான். அதுவும் தன்னைப்போல் வீரனுக வளர வேண்டுமென்ப தில் அவனுக்கு ஒரு தனி நாட்டம். உணவு அருந்தும் போது அதை அருகில் வைத்துக்கொண்டே உண்டான். தூங்கும்போதும் அதை அருகில் வைத்துக்கொண்டே தூங்கினுன். எல்லாவற்றிலும் மேலாக தனது மகனுகவே கருதி அன்பு செலுத்தினுன். அவன் போக்கு அவன் மனை விக்கே புதிராக இருந்தது.

நாட்கள் சில நகர்ந்தன—

வியாழன் என்று பெயர் பெற்ற தினம் வந்து நின் றது. நாளை விடிந்தால்—முனியப்பர் கோவில் வேள்வி ஊர் எல்லாம் ஒரே பரபரப்பு. இந்தமுறை என்ன சண் டையோ...? என்ன குழப்பமோ...??

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுப்பையன் வேள்விக்கான ஏற்பாடுகளைக் கவனிப்பதற்காக சைக்கிளை எடுத்துக் கொண்டு கிளம்பினான் அவன் முன்னால். வீமன் வந்து நின்று குலைத்தது. தூக்கி அணைத்து முத்தமொன்று கொடுத்து விடுகிறான்...அது மீண்டும் சைக்கிளையும் அவனையும் சுற்றிச் சுற்றிப் பாய்ந்து பாய்ந்து......அவன் பாதங்களை நக்கி மெல்லக் கடித்துச் செல்லம் பொழிகிறது. மீண்டும் அதைப்பிடித்து அணைத்து உச்சிமோந்து படலைக்குள் விட்டு விட்டு விடைபெறுகிறான்.

கிடாய்க்காரர் ஒவ்வொருத்தராய்ப் போய் பார்த்து உசார்ப்படுத்தி விட்டு கதிரவேலன் வீட்டிற்குள் நுழைந்தான்.

அங்கே ஒரே கும்பல். கதிரவேலனின் கிடாய் திக்குமுக்காட தின்னமுடியாதபோதும் தீத்திக்கொண்டே இருந்தனர்.

"வாயைப்பிடி."

"தவிட்டை அடை"

"கள்ளுப் போத்திலை இஞ்சை கொண்டா"

திணறுகிறது கிடாய். புதுக் கர்வத்தோடு சுப்பையனைப் பார்த்துத் தலையை அசைத்து பெருமிதம் செய்கிறது. அதற்கு தெரியுமா நாளை அவனால் தனக்கு ஏற்படும் கதியை?

கதிரவேலனுடையதுதான் தலைக்கிடாய். நாளைக்காலை இரண்டு கூட்டம் சின்ன மேளம், இரண்டு கூட்டம் பெரிய மேளம் சகிதம் ஊர்வலம் வரப்போகிறது. அதற்கான ஏற்பாடெல்லாம் துரிதமாக நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. அதைப் பார்த்துவிட்டுப் போகத்தான் சுப்பையன் வந்தான்.



"கதிரவேலு விடியும் வரைக்கும் கிடாயைக் கவனமாப் பாத்திரு. எக்கச் சக்கமாய் ஒண்டும் தீத்தாதை... அப்பநான் வரட்டே......?"

"ஓமண்ணை, இருட்டிப்போட்டுது. கொஞ்சம் கவனமாப் போ....."

சுப்பையன் சைக்கிளை வலித்தான், அது வீடு நோக்கிக் கிளம்பிற்று.

முச்சந்தி கழிந்து அடுத்த முடக்கும் திரும்பினால் வீடு.

முடக்கும் திரும்பி விட்டான்.

எங்கும் ஒரே இருள்......

சுப்பையன் பலம் எல்லாம்கூட்டி, நாலு உளக்கு உளக்குகிறான், சைக்கிள் வேகமாக செல்கிறது.

"கிறீச்...கிறீச்......கிச்......கிச்......அ......அ......"

சைக்கிள் ஓட்டம் தடைப்பட்டது

சுப்பையன் இறங்கி வயிற்றை பிடித்துப் பார்த்தான்... அவன் கையிலிருந்து பிடி தளர்ந்து தானாகவே விடுபட்டு விழுந்தது சைக்கிள்......அவன் வாய் அவனையும் அறியாமல் "ஐயோ...!!" எனக் கத்தியது.

தலை சுழன்றது......இதயம் வெடிப்பது போல...... ஆயிரம் சம்மட்டிகள் அவன் தலையில் அடிப்பது போன்ற நிலை.

உணர்வற்று மரத்துப் போய் அப்படியே சிலையாக நின்றான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் முன்—

பாசத்தையும் நேசத்தையும் அன்பையும் பரிவையும் பாலையும் சோற்றையும் கொட்டி வளர்த்த அந்த ஜீவன்—ஆம் வீமன்—வயிற்றில் இருந்து பெருகி வழியும் குருதி வெள்ளத்திடையே......வாயிலிருந்து கக்கப்படும் இரத்தாறின் மத்தியிலே......சக்கரத்தால் நசுக்கப்பட்டு பிதுக்கப்பட்ட குடற்கோளங்களுடன் பிரிந்த தசைகள் அசைய... கால்கள் துடிக்க...... கண்கள் ஒளி மங்கிப்போக......தன்னைச் சீராட்டித் தாலாட்டி வளர்த்த எஜமானைப் பார்க்கிறது. அவனும் பார்க்கிறான். அவன் கண்களில் தாரை தாரையாக வழிந்தோடும் கண்ணீரால் வீமனின் இறுதிச் செயல்களைக் காண முடியாதபடி தடுக்க முடியவில்லை.

வீமன் இறுதி முறையாகத் தனது எஜமானைப் பார்க்கிறது.

வால் இரண்டு முறை அசைந்து துடிக்கிறது. நன்றி என்ற சொல்லின் நடமாடும் அகராதி தனது இரண்டு முறை வாலசைவிலே உள்ளத்தில் எழுந்த நன்றியுணர்வை எல்லாம் உள்ளடக்கிக் காட்டிவிட்டு முகத்தைத் திருப்பிக் கொண்டது. மூச்சை முடித்துக்கொண்டது.

உணர்ச்சியற்ற வெறும் கூடாக எழுந்து நடந்தான் அவன். அவனுக்கு உணவு பிடிக்கவில்லை உள்ளம் உருகி உருகி அழுதது.

படுக்கையில் சரிந்தான் தூக்கம் பிடிக்கவில்லை. உள்ளத்திலே வேதனைத் தீ கொழுந்துவிட்டு எரிந்து கொண்டிருந்தது. குமுறிக் குமுறி அழுதான். பிள்ளைபோல் வளர்த்த வீமன் துடித்துப் பதைத்து இறக்கும் பரிதாபக்



காட்சி அவன் மனத்திரையில்......அதுவும் அவனால்......! வேதனை வேட்டுக்கள் வெடித்துச் சிதறிக் கொண்டிருந்தன அவன் இதயத்தில். படுக்கையில் புரண்டு கொண்டிருந்தான் அவன். எந்த மூலையைப் பார்த்தாலும் அங்கெல்லாம் வீமனின் இறுதி வாலசைவும் அதன் துடிதுடிப்பும்தான் தூக்கம் தராது புரண்டான். அவன் உள்ளத்தில் உணர்ச்சிப் புயல் உத்வேகத்தோடு சீறிச் சுழன்று அடிக்கின்றது. வேதனை வெள்ளம் பெருகிப் பெருக்கெடுத்துப் பாய்கிறது. சிந்தனை எரிமலைகள் சினந்து பிளக்கின்றன. இதயமே ஓர் துன்பியல் நாடக மேடையாக மாறுகிறது.

புயலோடு புயலாக வெள்ளத்தோடு வெள்ளமாக அவனிடம் உறைந்து கிடந்த மிருக உணர்வுகள் அடித்துச் செல்லப்படுகின்றன.

நாளைய நிகழ்ச்சிகள் அவன் எண்ணத்திரையில் வந்து நிற்கின்றன.

கதிர்வேலனின் முதலாம் கிடாய்......அதன் தலையசைவு......அதேபோல் பார்த்து நிற்கும் கிடாய்க் கூட்டம்......அவன் கண் முன் அவன் கையால்......இரத்த வெள்ளத்திலே.........

அதற்கு மேல் அவனால் எண்ணிப் பார்க்க முடியவில்லை. இதயம் வெடித்துவிடும்போல் இருந்தது. எழுந்து பைத்தியம்போல் அங்கும் இங்கும் நடந்தான்.

வெள்ளிக்கிழமை விடிந்தது......

'டும்!......டும்!......'

'பிப்......பீப்......பீ......'

கதிர்வேலனின் முதலாம் கிடாய் ஊர்வலம் வருகிறது. கழுத்திலே மாலைகள்...கண்களிலே கள்ளுக் கொடுத்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெறி.....வெற்றிப் பெருமிதத்தோடு தலையசைக்கிறது அதன் நடையிலே ஒரு மிடுக்கு.

ஊர்வலம் கோவிலடியை வந்தடைகிறது. கோவிலடி ஒரே பரபரப்புக்குள்ளாகிறது. வேள்வித்திடலில் நாலைந்து ஆசாமிகள் குந்தியிருந்தனர். சூழ்ந்து நின்று ஒரு கூட்டம் வேடிக்கை பார்த்தது.

அங்கிருந்து ஒரு குரல் "சுப்பையாவைக் காணேல்லை, ஓராள் போய்ப் பாத்தா......"

"நான் போறன்"

"விடு, நான் போறன்"

எவருக்குமே அவசியமின்றிச் சுப்பையன் வந்து கொண்டிருந்தான்.

சனக் கூட்டமெல்லாம் விலகி வழி விட்டது. அவன் வரவுக்கு.

அதோ......வருகிறான்......அவன் நடையிலே முந்தின கெம்பீரமில்லை......மிடுக்கில்லை......தூக்கி விழும் தலையை தூக்கிச் சுமந்து கொண்டு வருகிறான்.

தெருக்கூத்துப் பார்க்கும் மகிழ்வில் நின்ற கும்பலின் முகங்களில் எல்லாம் ஒரு வித ஏமாற்றம்.

சுப்பையன் போகிறான் சனக்கூட்டத்தை விலக்கி...... கடாக்களைக் கடந்து......வேள்வித்திடலை நோக்கி......... அங்கு போனவன் இருந்த கும்பலோடு சேர்ந்து அமர்ந்து விட்டான்.

சனக் கூட்டத்திற்கெல்லாம் ஒரே பிரமிப்பு! ஐயர் முகத்திலே வியப்பு! குந்தியிருந்தோர் முகத்திலெல்லாம் ஆச்சரியக்குறி.



எல்லோரும் பிரமித்து சிலைபோல் சில நிமிடம்...... சுப்பையன் எழுந்தான். அவன் முகத்திலே சோகக்களை...... சுற்றும் முற்றும் பார்க்கிறான். கட்டப்பட்டிருந்த கடாக்களெல்லாம் ஏதுமறியாத நிலையில் தங்கள் வீரப் பிரதாபங்களைக் காட்டி......சுப்பையன் முகத்தில் விகார மாற்றம்......மீண்டும் அமர்ந்து விடுகிறான்.

பார்த்து நின்ற கும்பலின் முகத்தில் படிந்திருந்த ஆச்சரியக் குறிகளெல்லாம் காலத்தின் போக்கிற்கிசைய ஆத்திரக் குறிகளாக மாற.........

"நேரம் போகுது கெதியா வெட்டு....."

—அவசரக்காரன் குரல்.

சுப்பையன் பேசாமல் எழுந்து நின்றான்.

முன்னைய குரலைத் தொடர்ந்து பல குரல்கள் எழுந்தன.

"ஏன் வெட்டவேணும்?......" சுப்பையன் மௌனம் உடைய வாய் கேட்டது.

"எங்கடை பாவம் தீரவேணும்....." என்றது ஒரு ஞானக் குரல்.

"அதுக்கு உங்கடை பிள்ளையளை......" அதற்குமேல் அவனால் பேசமுடியவில்லை.

"உவருக்கு எப்ப பிறந்தது உந்த ஞானம்....." ஒட்டி ஒளிந்து இருந்த கோழை ஒருவன் குரல்

"உனக்கு வெட்ட விருப்பமில்லாட்டி உன்பாட்டிலை போ....." நிலைமை அறிந்து பேசிற்று கதிரவேலனின் வாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முனியப்பருக்கு விழும் மந்திர பூசைபோல் சுப்பையனைச் சூழ்ந்து பல குரல்கள் ஒலித்தன. எவரும் கிட்ட நெருங்கப் பயம்தான்.

மறுகணம்—

எங்கோ ஒரு மூலையில் இருந்து வில்லேந்தி, வேலேந்திப் போரிட்ட வீரத்தமிழனின் விரல்கள் அழுத்திவிட்ட வேகத்தில் வந்த தற்கால மனிதனின் ஆயுதம் ஒன்று ஒண்டியாய் நின்ற சுப்பையன் மண்டையைப் பதம் பார்க்கிறது.

அவ்வளவுதான்;

அவன் தலையில் இருந்து குபு, குபுவெனப் பெருக்கெடுத்து மார்பு மலை வயிற்று மலை கடந்து வேள்வித் திடலில் சங்கமித்தது இரத்த ஆறு.

சுப்பையன் ஆடாமல் அசையாமல் சிலை போல் நின்றான்.

சந்தர்ப்பம் பார்த்துச் சீறிப் பாய்ந்தது கதிரவேலன் கும்பல்.

நீண்டே பழகிய தன் கால்களை உயர்த்தினால் போதும் அந்தக் கும்பல் நின்ற இடம் தெரியாமல் ஓடி இருக்கும்; ஆனால், அவனை உயர்த்தாமல் தடுத்தது உள்ளிருந்த ஒன்று.

பேசாமல் நின்ற பெருவீரன் உடலெங்கும் இரத்தம் வழிகிறது.

அடி !......உதை!!......குத்து !!!...“அவனைத் தொட்டுப் பார்க்கப் பயந்தவர்களும் குத்தித் திருப்திப்பட்டனர். தெருக் கூத்துப் பார்க்கும் கும்பலுக்கு இந்தப் போராட்டம் கண்ணுக்கு குளிர்ச்சியையும், மனதிற்கு நிறைவையும் கொடுத்தது.



“டேய்......ஜீப்படா......”

“டேய்......பொலீஸடா......”

“டேய்......துவக்கடா......”

திக்கெட்டும் அபாயச் சங்குகள் அலறின முறம் கொண்டு போரிட்ட பெருந்தமிழர் வீரமெல்லாம் பேச்சோடு பேச்சாகிப் போக......அறப்போர் புரிந்த மறத்தமிழர் கூட்டமெல்லாம் திக்கொன்றாய் தெறித்தோட......

தூரத்தில் வேடிக்கை பார்த்த நல்லோர் கும்பலோடு சேர்ந்து நல்லோராக......

விழுந்தெழுந்த தெல்லாம் கிலிகொண்டு வேலிக்கப்பால் பாய......ஜீப் வண்டி வந்துகொண்டிருந்தது.

சுப்பையன் நீண்டுயர்ந்த நெடுமரமாகத் தனித்து நின்றான். தேகமெல்லாம் பெருகி வழிந்த இரத்த வெள்ளம் வேள்வித்திடலில் கிடந்த தூசிகளைத் தூய்மைப்படுத்திச் சென்றது.

ஜீப் வந்து நின்றது.

வெற்றிப் பெருமிதத்தோடு நிமிர்ந்து நின்ற சுப்பையனைத் தூக்கிச் சுமந்து கொண்டு பறந்து சென்றது.

எந்த வேள்வி நடக்க வேண்டுமென்று சிறை சென்றானோ அந்த வேள்வியை நிறுத்திக் குழப்பம் செய்ததாக இதோ செல்கிறான், சுப்பையன்.

———

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சில சந்தர்ப்பங்கள் மனிதனை மிருகமாக்கி விடுகின்றன, ஆனுல், அதை அவன் உணரும்போது மீண்டும் மனிவனுகி விடுகிருன்,**

# வெறியும் உணர்வும்

கந்தசாமி பதின்மூன்ருவது தடவையாக நிலைக்கண்ணுடி முன் வந்து நின்ருன். இன்னும் அவன் அழகில் அவனுக்கு திருப்தி இல்லை. கன்னவகிடெடுத்து வாரி விட்ட தலையின் நெளிவு சுழிவுகளை ஒரு முறை உற்றுப் பார்க்கிருன். அதில் ஏதோ ஒரு குறை......ஆமாம் முன்னுக்கு இழுத்து விடும் சுருள் கொத்தையுமல்லவா மேல் வாரிவிட்டான்.

சுருண்டெழுந்து நின்ற கேசக் கொத்தைப் பிடித்து நெற்றியிலே ஆட விடுகிருன். அவன் இதழ்க்கடையிலே



இளநகை, ஒரு வித திருப்தி. அவன் நெற்றியிலே ஆடுகின்ற கேசச் சுருள் அந்தச் சந்தனப்பொட்டை ஆடி ஆடி மறைக்கின்ற அந்த விந்தைக் காட்சியை கற்பனைப் புலவர்கள் கண்டிருந்தால்......

என் இந்த அலங்காரம்? எதற்காக இந்த எடுப்பு? என்னைக் கேட்கிறீர்கள். அதோ! அந்த சந்தியில் பஸ்ஸிற்காகக் காத்திருக்கும் பள்ளிச் சிறுக்கிகளை கேளுங்கள். அவர்கள் சொல்லுவார்கள்.

கந்தசாமி என்ன சாதாரணமானவனு? வீட்டிலிருந்து கந்தோர் செல்வதற்குள் எத்தனை சிறிசுகளின் மனதை ஆட்டி வைத்து விடுகிருன். அநேகருக்கு அவன் கனவு ராஜாவும் கூட......

அரும்பு மீசையும், அதற்கேற்ற முகவெட்டும், இளமையின் வாளிப்பிலே குழுமை பெற்ற உடற்கட்டும் அலை அலையாய் நெளிந்து எழுந்து நின்ற கேசச் சுருள்களும் அல்லிராணிகளின் உள்ளங்களைக் கொள்ளை கொண்டதில் வியப்பில்லையே!

இத்தனைக்கும் அவன் ஒரு சாதாரண தபால்காரன். அவன் யாரையும் ஏறெடுத்து நோக்கியதும் இல்லை. எவருடனும் எந்தவித தொடர்பு கொண்டவனுமல்ல. ஆனுல் பிறரை தன், தோற்றத்தால் செயல்களால் கவர வேண்டுமென்ற அவா அவனுக்குண்டு.

ஊர்ப் பெரியவர்களிடத்தில் அவனுக்கு ஒரு மதிப்பான இடம் ஒதுக்கப்பட்டிருந்தது. மக்களெல்லோரும் அவன் வரவை எதிர்பார்த்துக் காத்துக்கிடந்தனர். பல பேரன்கட்கு பென்சன் துண்டு கொடுப்பதால் அவர்களுக்கு அவன் மீது ஒரு தனிப் பற்று. பல காதல் ஜோடிகட்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் தூதுவனாக இருப்பதால் அவர்களுக்கு அவன் மீது ஒரு தனிப் பற்று—பாசம். இன்னும் பலருக்கு பரிசுப் பொருட்களையும், வாழ்த்துச் செய்திகளையும், பார்த்துப் பாராமல் தூக்கிக் கொடுப்பதால் அவர்களிடத்திலெல்லாம் ஒரு வித மதிப்பு இருக்கத்தான் செய்தது இத்தனைக்கும் மேலாக அவன் சிரித்த முகமும் இனித்த பேச்சும் அவனுக்கிருந்த செல்வாக்கை உயர்த்தியிருப்பதில் வியப்பில்லை. ஊருக்குள் விரல் விட்டு எண்ணக்கூடிய நல்ல பையன்களுள் கந்தசாமி முதன்மை வகிக்க கூடியவன்தான்.

கந்தசாமி முன் "கரியர்" பூட்டிய சயிக்கிலை தெருவிலே இறக்கி இரண்டு மிதி மிதித்தான். அது நேரே கந்தோரிற் போய் நின்றது. சுறுசுறுப்பாக தபால்களைப் பிரித்தடுக்கி ஒழுங்கு பண்ணி நாலு கட்டாகக் கட்டி பையிற்போட்டுக் கொண்டு மீண்டும் சைக்கிளில் ஏறினான்.

தெருக்கள், ஒழுங்கைகள் சந்திகள், மூட்டுகள், முடக்குகள், குச்சுகள், எல்லாம் சுற்றி ஒரு மாதிரி முக்கால் வாசிக்குமேல் கொடுத்துத் தீர்த்து விட்டான். இன்னும் இருப்பது நாலைந்து வீட்டுக்குக் கொடுத்தால் சரி. கடமை முடிந்து விடும்.

நேரம் உச்சிப் பொழுதை அண்டிக்கொண்டிருந்தது. பங்குனி மாத வெய்யில் கனல் பறக்கக் காய்ந்துகொண்டிருந்தது. நாவரட்சி எடுத்தது. கணவேகத்தில் சென்றுகொண்டிருந்த சைக்கிள் தானகவே நின்றது. அது செல்லத்துரை மாஸ்டர் வீடு கந்தசாமியின் தண்ணீர்ப் பந்தலும் கூட.

"மாஸ்டர் இருக்கிறாரோ...?"



"உதார்......கந்தசாமியே என்தென் கிடக்கே எனக்கு......"

"ஒண்டுமில்லை மாஸ்டர், ஓரே வெய்யிலாக் கிடக்கு கொஞ்சம் தண்ணி"

"உனக் கெண்டுதானே நல்ல தண்ணி எடுத்து வச்சாப் போலை கிடக்கு, இப்படி உள்ளே வா..." இஞ்சை... பிள்ளை அந்தத் தண்ணியை எடுத்துக்கொண்டு வா..."

செல்லத்துரை மாஸ்டரின் ஓரே மகள் "பூங்கொடி" தரையைத் தாவிப்பிடிக்கும் தாவணியை இழுத்துச் சொருகிக் கொண்டு, பட்டுக் கரத்தில் நீர்ச்செம்பேந்தி, பொட்டு வைத்த முகத்தில் பொலிவு பொங்க சிட்டாக அசைந்து வந்தாள்.

அவள் கருவிழிகளில்காணும் ஜாலம்; கன்னத்தில் படரும் செம்மை அங்க அசைவுகளில் தெரிந்த லாவகம் எல்லாம் அவனை என்னவோ செய்வது போல் இருந்தது. தன் நிலை இன்றிக் கற்பனை உலகில் சஞ்சரித்துக் கொண்டிருந்தவன் விழிகளைத் திருப்பிய போதுதான் தனக்கு முன் தண்ணீர்ச் செப்புடன் நிற்கும் செல்லத்துரை மாஸ்டரைக் காணமுடிந்தது.

தண்ணீரை வாங்கிக் குடித்தான். உள்ளம் படபடத்தது. தனது சொற்ப நேர பலவீனத்தை செல்லத்துரை மாஸ்டர் கவனித்தாரோ? என்ற பயம் இதயத்தை இடிக்க......தன்னைச் சமாளித்துக்கொண்டே......

"அப்ப நான் வரட்டே மாஸ்டர்?......"

"ஏன் என்ன அவசரம்?...... உன்னட்டை

ஒரு சின்ன விசையம் சொல்லிப்போட்டுப் போகலாம் எண்டுதான்......"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நேரம் போகுது மாஸ்டர். முட்டை வேற வாங்க வேணும் விசயத்தைக் கொஞ்சம் கெதியாச் சொல்லுங்கோ மாஸ்டர்......"

"நாளைக்கு நான் ஒரு அவசர விசையமாக் கொழும்புக்குப் போறன். ஆச்சியும் பிள்ளையும்தான் இஞ்சை தனிய. உதாலே போகேக்கை ஒருக்கா எட்டிப் பார்த்துக் கொண்டுபோ......"

"நீங்களொண்டும் பயப்பிடாமற் போங்கோ. அதெல்லாம் நான் கவனிச்சுக் கொள்றன்.

"சும்மா தெரியாதே பயந்ததுகள். அயலட்டையும் குறைவு, அதுக்காகத்தான்......"

"அதுக்கொண்டும் பயப்பிடாமற் போங்கோ...... நேரமாச்சு நான் வாறன்."

சைக்கிளில் ஏறிக்கொண்டான். சக்கரங்கள் வேகமாக உருண்டன. அவன் கண்முன் தன்னை நம்பி ஒரு குமரியை விட்டுவிட்டுச் செல்லும் செல்லத்துரை மாஸ்டரின் அன்புமுகம் தெரிகிறது. அவர் பண்பான பேச்சு அவன் காதுகளில் தெளிவாகவே கேட்கின்றது. 'சே......சே... அந்தப் பாலுக்குக் காவல் இந்தப் பூனையா?'

ஒரு கணம் அவன் இதயத்தை இருள் கவ்விக்கொள்கிறது. பூங்கொடி என்ன சாதாரண அழகியா? சே...... அவள் பார்வையிற்றான் எத்தனை கவர்ச்சி! என்ன நளினம்! இப்படி அசைந்து நடந்தாளே! அவள் நடை!! சையிக்கிள் சரிந்து வேலியைச் சரணடைகிறது; அவன் விழித்துக் கொள்கிறான். சே......இவ்வளவு பெலவீனனா நான்......? மறு கணம் அவன் இதயத்தின் எங்கோ



ஓர் மூலையிலிருந்து சிரிப்பின் ஒலி காதுகளை நிரப்புகின்றது. ஆமாம்......கள்ளம் கபடமற்ற செல்லத்துரை மாஸ்டரின் நம்பிக்கைச் சிரிப்புத்தான் அது.

அவன் தலை சுழல்கிறது. அதைவிட வேகமாக விரைந்து சுழல்கிறது சையிக்கிள் சக்கரம்.

அதை வென்றுகொண்டிருந்தது காலச் சக்கரம்.

நிம்மதி குறைந்த மனத்தோடு ஊர்த் தியேட்டர். ஒன்றினுள் புகுந்தான் கந்தசாமி.

ஆங்கே—

"அன்பே! ஏன் இவ்வளவு நேரம்?"

"அமுதே! உன் அப்பன் இருக்கிறானே என்று பயந்தேன்..."

"அவர் பறந்து போய்ப் பல நாழிகையாகிவிட்டனவே......"

"அப்படியா! என் இன்பமே... என் எட்டிப் போகிறாய் கிட்டே வா!!......"

"நாணமாய் இருக்கிறதே...... கையை விடுங்கள், யாராவது பார்த்துவிடப் போகிறார்கள்......"

"நம்மைத் தவிர இங்கு யாருமில்லையே!......"

"போங்கள் அத்தான்......" பிகு பண்ணுகிறாள் அவன் கரங்களுக்கிடையே அவள்.

அன்பின் பிணைப்பு,

நீக்கமற்ற அணைப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெடுக்கென்று வெளியேறுகிறான் கந்தசாமி. இடைவேளை மணி கிணு......கிணு......என்றொலித்தது. பைத்தியக்காரப் படங்களைப் பார்த்தே பழக்கப்பட்டவன்தான் அவன். இருந்தாலும் பார்க்க வந்து விட்டான், நிம்மதி கிடைக்கும் என்ற நினைவில். ஆனால் கிடைத்ததோ....?

வீடு நோக்கி விடுவிடென்று நடந்தான். உணவு அவனுக்குக் கசந்தது. உதவாக்கரைப் படங்கள் ஊட்டிவிடும் போதை.

தூங்கலாம் என்று படுக்கையில் சரிந்தான் தூக்கம் பிடிக்கவில்லை. காற்றே அற்ற சூன்ய அறை. ஒரே புழுக்கம். அவன் உள்ளத்தைப்போல.

சாய்வு நாற்காலியை முற்றத்தில் போட்டு விட்டுச் சாய்ந்து கொண்டான். காற்று வீசத்தான் செய்தது. அதனால் ஆறக்கூடியது வெளிப்புழுக்கமல்லவா? உள்ளம் புழுங்கிக்கொண்டே இருந்தது. அது நித்திரா பகவானோடு எதிர்ப்போர் புரிந்து கொண்டிருந்தது.

பெருவானத்தைப் பார்த்தபடி நிமிர்ந்து படுத்துக் கொண்டான்.

கண்கள் வெட்டாமல் விழியாமல் எதையோ பார்த்துக்கொண்டிருந்தன.

அங்கே —

நிறை பொலிவோடு தனித்து நிற்கும் நிலவு மங்கையை நோக்கி மோகச் சிரிப்புடன் விரைந்து வரும் கருமுகிற் கூட்டம்.

பீதியால்......நிலா மோகினியின் கன்னத்தில் கரும் கோடுகள் படரும் காட்சி.



சொற்ப நேரம்......
எங்கும் ஒரே இருள்
முகிலின் அணைப்பிலே நிலா !
நீக்கமற்ற பிணைப்பு !

சகிக்க முடியவில்லை. முகத்தைத் திருப்பிக்கொண்டான் கந்தசாமி.

அங்கே —

கோடி வீட்டு இலுப்பையில் கூடிக் குலாவும் யோடி வௌவால்களின் உச்...... உச்...... என்ற இன்ப கீதம் அவன் காதுகளில் தெளிவாகக் கேட்கிறது.

லிக்...... லீக்...... லீக்......”

“ திரும்பினான் மறுபுறம்.

சுவரிலே பெட்டையைத் துரத்திச் செல்லும் ஆண் பல்லி......!

கண்களை இறுக மூடிக்கொண்டான், எதையுமே பார்க்காத வகையில். புரண்டு புரண்டு படுத்தான், தூக்கம் பிடிக்கவில்லை. உள்ளமெல்லாம் ஒருவகைப் புது உணர்வால் நிரம்பிக்கொண்டிருப்பதை அறிய முடிந்தது அவனால்.

காலப்பறவை யாருக்கும் காத்திருக்காமல் பறந்து கொண்டிருந்தது. எண்ணற்ற இளம் இதயங்களுக்கு இன்ப வேதனைகளைக் கொடுத்துக்கொண்டிருந்த கொடிய இரவு. உறக்கத்தின் பிடியிலிருந்து தன்னை விடுவித்துக்கொண்டு இருள் போர்வையை உதறித் தள்ளிவிட்டு எழுந்து சென்று கொண்டிருந்தது.

“ றிங்...... றிங்...... றிங்......”

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அதாவது..... ஓ...... நீங்களோ......" கந்தசாமிக்கு என்னவோபோல இருந்தது.

"மாஸ்டர் வந்திட்டாரோ......?" சும்மாதான் கேட்டான்.

"இல்லை......என் தெருவிலை நிக்கிறியள்...... உள்ள வரக்குடாதோ......" குயில் தான் கேட்டது குத்தலாக சந்தர்ப்பத்தைத் தவறவிட அவன் என்ன முட்டாளா? சைக்கிளைச் சாத்திவிட்டு உள் விறாந்தையில் போட்டிருந்த கதிரையை இழுத்துப் போட்டுக்கொண்டு இருந்தான்.

"எங்கை ஆச்சியைக் காணேலை எங்கையோ போவிட்டாவோ?"

"இப்பதான் கூப்பன் கடைக்குப் போனவ. இன்னும் காணேலை. அவவுக்கென்ன கதை கண்ட இடத்தில் கயிலாயம் எண்டிருந்துடுவா......?

சூழலை உணர்ந்த அவன் நாவில் வார்த்தைகள் வராது தடைப்பட்டுக் கொண்டன. உள்ளூர ஒரு வித பயம். கவ்விக்கொள்ள, அவளை நிமிர்ந்து பார்க்கவே கூசினான். அவனையறியாது வெட்கம் எங்கிருந்தோ வந்து அவன் உள்ளத்தில் புகுந்துகொண்டது.

சொற்பநேர மௌனம்

அவள்தான் அதையும் உடைத்தாள்.

"அப்ப நான் போய்த் தண்ணி போட்டாறன் இருங்கோவன். இன்டைக்கென்ன லீவுதானே!"

தண்ணி வேண்டாமென்று சொல்லத்தான் நினைத்தான் ஆனால் முடியவில்லை. பதிலை எதிர்பார்க்காமலே சென்றுகொண்டிருந்தாள் அவள்.



முன்னுக்கு நிற்கும்போது அவள் அழகைப் பருக மறுத்த கண்கள் பின்னழகையாகுதல் பார்க்க முடிந்ததே என்று திருப்திப்பட்டன. பார்த்தவன் அப்படியே கொட்டாமல் வெட்டாமல் பார்த்துக்கொண்டிருந்தான்.

அவள் திரும்பிப் பார்க்கிறாள்—தன்னை இமை கொட்டாது பார்த்துக்கொண்டிருக்கும் அவனைக் கண்டதாலோ என்னவோ அவள் இதழ்களுக்கிடையே முத்துக் குவியலா......? அவள் சிரிக்கிறாள்.

அடுப்படிக் கதவு தடார் என்று தன்னாலே அடித்துக் கொள்கிறது. ஏமாற்றத்தின் சாயல் படிந்த முகத்துடன் தன்னிலை மறந்து நாற்காலியில் சாய்ந்துகொள்கிறான். என்றாலும் அவனை உணராத இன்பக் கிளு கிளுப்பு அவனுக்கு.

வெய்யில் புழுக்கத்தால் வேர்த்துக் கொட்டவே சேட்டின் பித்தான்களைக் கழற்றி விட்டு அலாக்காக காலைத் தொங்கப் போட்டபடி சாய்ந்து விடுகிறான்.

அவன் மனத்திரையிலே எக்காளமிடும் எத்தனையோ நிகழ்ச்சிக் கோர்வைகள்...... நேற்றைய சினிமாப்படம்... ஜோடியோடு குதூகலிக்கும் வௌவால்...... ஜதை நாடி நிற்கும் பல்லி...... உணர்வற்ற ஒழி நிலவின் சாசம்... அத்தனைக்கும் மேலாக பூங்கொடியின் சிரிப்பு...... மறைந்து கிடந்த மிருக உணர்வுகளை அவன் மாமிச கோளங்கட்கு ஊட்டுகின்றன. அவன் மனம் அசையும் பக்கமெல்லாம் அவள் சிரிப்பு......

அவன் கண் முன் கூட.....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீராந்தி மரத்தின் மேல் கம்பில் இரண்டு சிட்டுக் குருவிகள் ஒன்றை ஒன்று கலைத்துக் கொண்டு......மூலைச் சுவர் 'இடுக்கில் இரண்டும் ஒன்றாகி......

இதயத்தின் அடித்தளத்தில் எஞ்சியிருந்த மனித உணர்வுகளும் செத்து ஜீவனற்று வெறும் சாம்பற்காடாக...

இதயமே சூன்யமாக...... வெறிகொண்ட வேளம் போல் எழுந்தான்......!!

அவன் முன்னே கள்ளம் கபடமற்ற வெள்ளைச் சிரிப்போடு......தெள்ளத் தெளிந்த இதயத்தோடு...... பூங்கொடி கையில் தேனீர்க் குவளையுடன் வருகிறாள்.

மறுகணம் —

தேனீர்க் குவளை மேசையை அடைகிறது. அவன் வலிய முரட்டுக் கரம் அவள் மென்கரங்களைப் பற்ற...... தாளாது அவள் துடிக்க...வாய் கதற... கை அடைக்க... வளையல்கள் உடைந்து சிதற... முரட்டுக் கரங்களுக்கிடையில் உடல் துவள...... உள்ளம் வேக......

வலிமைக்கும் மென்மைக்கும் மிடையில் பயங்கரப் போராட்டம் !!

வெறி கொண்ட வேங்கையின் முன் வெள்ளாடு எம் மாத்திரம் ?

மிருகப் போராட்டத்தின் முடிவிலே......?

செல்லத்துரை மாஸ்டரின் பிரிவுப் பந்தலிலே படர்ந்து, அன்புச் செழிப்பிலே வளர்ந்து, மலர்ந்து, நின்ற பூங்கொடி உணர்வற்ற, மனித மிருக மொன்றால் கசக்கி முகரப் பட்டு வாடி வதங்கி நினைவற்ற நிலையில் துவண்டு கிடந்தாள் தரையில்.



வெறி தீர்ந்த நிலையில் எழுந்து நடந்தான் அவன் — மறுவினாடி —

" அண்ணே......தண்ணி......!! " ஜீவனுக்கு மன்றாடும் சிசுப்போல் அநுங்குகிறாள் அவள்.

இந்தப் பிரளயமே பிளந்து, சரிந்து ஆதிசேடன் தலையிலிருந்து தன் தலையில் விழுவது போன்ற நிலை...... சிவன் தலையிலிருந்த கங்கை அவன் கண்களில் ஊற்றெடுத்துப் பாய...... தன் நிலை தடுமாற...... உணர்விழந்தவனாக எதிர் நின்ற சுவரில் தலை மோத......அதிலிருந்து பெருகி வழிந்த குருதி வெள்ளம் அவன் கரங்களிற் படிய...... இரத்தம் தோய்ந்த கைகளால் அவள் கொண்டு வந்து கொடுத்த தேனீர்க் குவளையை அவன் உதட்டோரத்தில் வைத்துப் பருக்கி...... கேவலம் மிருக வெறி பிடித்து நின்ற தன்னை அண்ணா !! என்றழைத்த அருயிர்த் தங்கையை இறுதி முறையாகப் பார்த்துவிட்டு...... பைத்தியம் பிடித்தவன் போல் தெருவில் நடந்துகொண்டிருந்தான்.

சிறிது தூரம்தான் சென்றிருப்பான்.

அங்கே —

ஒரே கூட்டம். பத்துப் பதினைந்து பிறந்த மேனியோடு கூடிய வாண்டுப் பயல்கள் எதையோ வேடிக்கை பார்த்துக்கொண்டு நின்றனர்.

கூட்டத்தை நெருங்கிவிட்டான். இரண்டடி முன் வைத்தவன் அப்படியே சிலை போல நின்றான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் முன்னே —

கறிக்கடைச் சதுப்பிலே புரண்டு சொறி பிடித்த நாய்கள் இரண்டு...... ஏதோ ஒரு விஷயத்திற்காகப் பிணக்குப் பட்டு...... ஒன்று மறுக்க...... மற்றது வெறியோடு கலேத்து...... இரண்டும்......

அதற்குமேல் அவனுல் அங்கு நிற்க முடியவில்லே. தலேயிலே பேரிடி யொன்று விழ...... உள்ளத்திலே சூறுவழி கிளம்ப...... இதயத்திற் பாய்ந்த எண்ணற்ற ஈட்டிகளின் வேதனே தாங்காது அது இரத்தக் கட்டிகளே கக்க... நாடி நரம்பறுந்த நடைப்பிணமாய் ஓ...!!! வென்ற அலறலுடன் ஓடுகிருன்...... ஓடுகிருன் உந்தியிழுக்கும் ஏதோ ஒன்றை வாரியணேக்க......? ......??

**யார் கண்டார் அவன் முடிவு மரணத்தில் என்று ?**

---

**மனித உருவில் உள்ளோர் எல்லோரும் மனிதரல்ல
மனிதத் தன்மைக்குரிய செயல்களே எவன் செய்கிருனே
அவனே மனிதன்**

# மனிதப் பிறவி

**"புல்லாகிப் பூடாகிப் புழுவாய் மரமாகி
பல் மிருகமாகிப் பறவையாய்ப் பாம்பாகி
வல் லசுரராய்........."**

என்று ஏதோ முற்பிறப்பு இப்பிறப்பு முழுதும் உணர்ந்த பெரு ஞானிபோல், வாயில் வந்த தேவாரத்தை அசை போட்டுக் கொண்டே கொழுத்துகின்ற வெய்யிலில் முக்கித்தக்கி தொளு தொளன்று வளர்ந்துவிட்ட தொந்தி வயிற்றைத் தூக்கிச் சுமந்து, இரண்டாவது முறையாக வீதியை வலம் வந்துகொண்டிருந்தார் கணபதிப்பிள்ளே உடையார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ன செய்வது? கஷ்டத்தைப் பார்த்தால் முடியுமா? இன்னும் ஒரு சுற்றுச் சுற்றிவிட்டால் கடமை தீர்ந்துவிடும் அதற்கிடையில் நேற்றைய வள்ளிக்கூத்து நித்திரைவேறு கண்ணைக் குடைகிறதே "துன்பத்தின்மேல் துன்பம் பகவான் சோதிக்கிறார் போலும்" உடையார் வாய் அவரை அறியாமல் முணுமுணுத்தது.

மூன்றாவது முறையாக வீதியைச் சுற்றி வந்த உடையார் விரக்தியோடு கடமையை முடித்து விட்ட திருப்தியும் சேர முழந்தாளிட்டு முழு உடம்பைத் தரையிற்சாத்தி நுணசை முருகனை முழு மனதோடு வணங்கி நினைத்ததெல்லாம் பெற்றுவிட்ட திருப்தியுடன் எழுந்து நின்றார்.

இடுப்பில் இருந்து இருப்புக் கொள்ளாது குலைந்து விழுந்த உத்தரியத்தை இறுக்கிச் சொருகி விட்டு காவடி மடத்தில் போய் தாகசாந்தி செய்தார் முதல் வேலையாய். அதற்கப்பால் தனது ஏற்பாட்டில் நடந்து கொண்டிருந்த அன்னதானப் பந்தலை அலாக்காக எட்டிப்பார்த்து அதிகாரத் தொனியில் சில உத்தரவுகளைப் பிறப்பித்துக் கொண்டே அருகில் நின்றுகொண்டிருந்த பட்டினிக் கும்பலை விரட்டி உத்தரவுக்குப் பணிய மறுத்தவர்களுக்கு உதை கொடுத்து விட்டு ஆதிபகவானை நோக்கி ஏறுகடை போட்டார் தர்மப்பிரபு.

"உதாரது சொத்திச் சின்னானே!? உனக்கே உதை விழுந்தது" என்றான் தப்பித்துக்கொண்ட ஒருவன்.

"ஓமடாப்பா.....ஓட எடுக்க மாட்டாததுகள் இஞ்சை ஏன் வந்ததுகள்" அதுக்குத் தாளம் போட்டான் மற்றவன்.



"என்ன செய்யிறது மேனே அதுவும் வயிற்றுக்குத் தானே" என்றது அநுதாபத்தோடு கூடிய ஒரு கிழக் குரல்.

தனக்காக அநுதாபப் படுகின்ற இந்த உலகத்தின் ஒரே ஜீவனைக் காண்பதற்கோ என்னவோ சின்னான் மெல்லத் தலையை நிமிர்த்தி எழுந்திருக்க முயன்றான்.

**சின்னான்** உலகத்தால் ஒதுக்கப்பட்ட ஜீவன். அவனுக்கென்று இந்தப் பரந்த உலகத்திலே எதுவுமே கிடையாது. அவனுக்கென்றிருந்த ஒரே சொத்தான செல்லாச்சியும் சென்ற வருட நல்லூர்த் தேருடன் தெற்குத் திசைப் பயணம் போய்விட்டாள். இன்றைக்கிருப்பதெல்லாம் ஊன்றுதடியும் தகரக்குவளையும் தான். அவையும் யார் சொத்துகளோ? அதைக்கொண்டு இந்த உலகத்தையே சுற்றி விட்டான். நல்லூர்த் தேரிலே கிடைத்த நாற்பத்தைந்து சதத்துடன் பறாளைக்கு வந்து இன்று நுணசைக்கும் வந்து விட்டான். உடையார் புண்ணியத்திலே நடக்கும் அவியலில் கலந்து கொள்ளும் அழையா விருந்தாளி அவன்" அவியலுக்கு இன்னும் குறைந்தது மூன்று மணியாவது ஆகும். அதுவரையும் வயிறு சும்மாயிருக்கிறதா? முந்தநாள் மூன்ற விளைக் கண்ட வயிறு இன்றைக்கு ஏதாவது நிரம்பக் கிடைக்கும் என்ற நம்பிக்கையில் குடைந்து கொண்டிருக்கிறது.

கோயில் மணி டாண்...... டாண்...... என்றடிப்பது சின்னான் காதுகளில் விழுந்தது. "அப்பனே முருகா" என்று மூன்று முறை குட்டிக்கொண்டான்.

"வசந்த மண்டபத்துப் பூசை இப்பதானே துவங்குது" அலுத்துக்கொண்டே துண்டை உதறித் தேர்முட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டியடியில் போட்டுவிட்டு மெள்ளச் சரிந்தான் சுவாமி சுற்றி வாறதுக்கிடையில் ஒருகண் கொண்டு எழும்பி விடலாம் என்ற நம்பிக்கை அவனுக்கு.

நுணசைத் தேர்முட்டிக்குப் பண்டைய பெருமைகள் பல உண்டு. நுணசை முருகனை தேருக்கு ஏற்றி இறக்கும் வெறும் படியாக மட்டும் அது இருக்கவில்லை. பலகிராமத்து இளவட்டங்களுடையதும் மகாநாட்டுப் பந்தலாகவும் விளங்கியது. கூத்துக் காலத்தில் படுக்கை இடமாகவும் பாவிக்கப்படுவது உண்டு. இத்தனைக்கும் ஈடு கொடுத்து கால வெள்ளத்தால் சிதைக்கப்பட்ட தளும்புகளுடன் பாசிப்பற்றும் சேர அதிற் படர்ந்த புல்லும், பூடும், ஆலும், அரசும் பழுது பார்க்கப்பட்டு பல வருடங்களாகின்றன என்பதைச் சொல்லாமல் சொல்லிக் கொண்டிருந்தன.

ஐந்தாம் திருவிழா என்றால் தேர்முட்டிக் கும்பலுக்குக் கேட்பானேன். ஒன்றுக்கு நாலு ஒரு மூலையில், முந்நூற்றிநாலு மறு மூலையில், பூச்சட்டைகளையும் தாவணி பின்னல்களையும் பார்க்கிற புனிதக் கும்பல் மற்றோர் மூலையில், வீண் விவாதக்காரர் வேறோர் மூலையிலுமாகத் தேர்முட்டியை ஆக்கிரமித்து இருந்தனர். அங்கிருந்து கிளம்பும் சத்தம் முகட்டைக் கிளப்புமோ? எனச் சிலர் பயந்தனர்.

“ஒண்டுக்கு நாலு ஓடிவா...... ஓடிவா......”

“அடி......கம்மாரிசு.........”

“மச்சான் குதிரைவால் வருகுதடா” முன்னறிவிப்புக் கொடுத்தான் ஒருவன்.

“அங்காற்ற பூனைக் கண்ணியடா......”



அங்கலாய்த்தான் மற்றவன் ஒரே நிசப்தம்—

எல்லோர் விழிகளும் வழியை நோக்கி......

புத்தியுள்ளவன் கட்டையைப் புரட்டினான்

சளவுப் பிரியன் “காட்சை” மாற்றினான், காரியம் முடிந்தது.

விவாதக்காரர் விட்ட இடத்திலிருந்து தொடங்கினர்

“என்ன இருந்தாலும் கடவுள் இருக்கென்று சொல்லுவது சுத்தப் பயித்தியக்காரத்தனம்”— பெரிய விஞ்ஞானியின் குரல்.

“இல்லை என்று சொல்லுவதுதான் பயித்தியக்காரத்தனம்”— மெய்ஞானியின் வாதம்.

“ஏனப்பா நேரத்தை வீணாக்குகிறீர்கள்?”—பிஸ்னஸ்காரர் பேச்சு.

“கடவுள் இல்லையென்டா எனும் உவர் இங்கே வந்தவர்”— அநுசரணையாளர் கேள்வி.

“உங்களையும் கோவிலையும் இல்லாமப்பண்ண!” தீவிரவாதியின் குரல்.

சொற்பநேர மௌனம்.

எங்கோ ஒரு மூலையிலிருந்து ஓர் ஈனக்குரல் முனகிற்று. எல்லோர் விழிகளும் தேர்முட்டியின் அடித்தளத்தை நோக்கித் திரும்பிற்று.

அங்கே—

காலமங்கையின் மோகச்சிரிப்பினால் கோரப்படுத்தப் பட்ட ஒற்றைக்காலற்ற ஜீவன் ஒன்று வறுமைப் போராட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டத்திலே சிக்கிச் சுழன்று சிறகொடிக்கப்பட்டு வகை காணாது வடுத்தோய்ந்த முகத்தைத் தூக்கி உயர்த்தி இருட்குகைக்குள் ஒழிந்து கிடந்த கண்களை மேலெழுப்பி; பொக்கை வாயைத் திறந்து ஏதோ சொல்ல முயற்சித்தான் முடியவில்லை.

கைகளை உயர்த்தி ஒட்டி உலர்ந்து போயிருந்த வயிற்றிலே ஒன்றை வைத்து மற்றதை மேலே உயர்த்திப் பொருள் தெரியாத வார்த்தையில் ஏதோ முனகினான். வரண்டு இருண்டு போயிருந்த விழிக்குகையில் உற்பவித்துச் சுருங்கிச் சிதைந்த கன்னத்தைத் தடவித் தரையை முத்தமிட்டன. இரண்டு கண்ணீர்த் துளிகள். அதற்கு மேல் அவனால் பேச முடியவில்லை. மீண்டும் சரிந்து சுருண்டு கொண்டான்.

மனித இதயம் உள்ள ஒவ்வொருவருக்கும் அவன் பேசாத வார்த்தையின் அர்த்தம் விளங்கியிருக்கும். ஆனால்......?

“அவன் அவியல் சோத்துக்கு வந்தவன். கோவிலில்லையெண்டால் அவன்பாடு பட்டுப்போம். அதுக்குத்தான் அனுங்கிறான்” என்றது மனிதனென்று பெயர் பெற்ற உருவமொன்று.

“என்னவாம் உவர்? அவன்ரை சாலத்திலை மயங்கிப் போனாரோ?” தாளம் போட்டது மற்றது.

எதுவுமே பேசாது எழுந்து நடந்தான் எதிர்த்தரப்புத் தீவிரவாதி, அவன் இதயமுள்ளவன்.

காண்டாமணி கணங்...... கணங்...... என்று ஒலித்தது. எல்லோர் கவனத்தையும் ஈர்த்தது.



இருண்டது விடிந்தது தெரியாமல் சீட்டாடியவர்களும் காசுகட்டிக் காலத்தைக் கடத்தியவர்களும், வீண் அரட்டையடித்தவர்களும் தற்காலிகமாகத் தங்கள் திருப்பணிகளை ஒத்தி வைத்துவிட்டு எழுந்தனர்.

“எடே சுவாமி சுத்தி முடிஞ்சுதடா வாடா மச்சான் விபூதி சந்தனமாகுதல் வாங்கிப் பூசிக்கொண்டு போவம்.”

பக்தகோடிகளெல்லாம் பக்திப் பரவசத்தோடு நீறு சந்தனமணிந்த மேனியராய், வீடுநோக்கி விரைந்துகொண்டிருந்தார்கள்.

* * * *

அன்னதானப் பந்தலிலே ஒரே கூட்டம் ஒரே நெரிசல்; வல்லமையுள்ள கூட்டம் முதற் சபையில் குந்திவிட்டது. உயர்சாதிக்காரர்களுக்கு உட்பந்தலில் சபை வைக்கப்பட்டது. பசியே அறியாத பிறவிகள் உண்ட மிச்சமெல்லாம், வெளிப் பந்தற் குறைப் பிறவிகளுககு வழங்கப்பட்டது.

“ஆகா! என்ன கூட்டு! என்ன கூட்டு!!”
“அப்பிடி ஒரு குழம்புடா!”
தருமம் செய்தாலும் செய்யவேணும் இப்படியல்லோ!

தலையில் சுற்றிய தலைப்பாகையுடன் அங்குமிங்குமாக நடந்து கட்டளைகளைப் பிறப்பித்துக்கொண்டிருந்த உடையாருக்குப் பட்டினிக் குப்பலின் பிரமாத மொழிகள் நிச்சயமாக அடுத்த தேர்தலில் பாராளுமன்றம் போய்விடலாம் என்ற நம்பிக்கையை வலுப்படுத்தியது. பெருமையும் கருவமும் சேர உற்சாகமாக நடந்து கொண்டிருந்தார் உடையார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணவின் மணம் ஊட்டிவிட்ட ஊழிப்பசியின் கோரப் பிடியிலே சிக்கிச் சித்திரவதைப் பட்டுக்கொண்டிருந்தது சின்னானின் வயிறு.

என்ன செய்வது? முதற் பந்தியில்தான் இடம்கிட்டவில்லை இரண்டாவதிலுமா கிட்டாது? நிச்சயமாகப் பிடித்து விடலாம் என்ற அசட்டு நம்பிக்கை சொத்திச் சின்னானுக்கு.

முதற்சபைக்காரர் மூட்டை முடிச்சுகளுடன் எழுந்து போய்க்கொண்டிருந்தனர். சின்னான் முகத்திலே ஒருவித மலர்ச்சி. முட்டி மோதி ஒருவாறு கோலை ஊன்றி எழுந்துவிட்டான். துண்டை எடுத்து உதறிக்கொண்டே தாண்டித் தாண்டி நடந்தான். உள்ளத்திலே மகிழ்வின் முகை...... பசியே போய்விட்டது போன்ற திருப்தி. வரண்டுபோய்க் கிடந்த நாவிற்கூட இரண்டு துளி ஜலம்.

அவன் முன்னேறினான். ஏதோ ஒன்று அவனை முன்னிழுத்துக்கொண்டிருந்தது. சொத்தியன் வேகமாக நடந்தான். சோற்றின் மணம் மூக்கைக் குடைய அவன் நடையிலே ஒரு தடை.

"ஆ......! இரண்டாம் சபைக்கும் இவ்வளவு சனமா!! ......" அவனையறியாமலே அவன் வாய் உளறிற்று.

"ஏனப்பா இவ்வளவு பிச்சைக்காரரையும் படைத்தாய்" என அவன் உள்ளம் முருகன்மீது குறைப்பட்டுக் கொண்டிருந்தது.

"விடு இஞ்சாலை"

"தள்ரா அங்காலை"



"சொத்தியா ஓடடா"

"கறுப்பா எனக்கும் ஓரிடம் பிடியடா" ஓரே இடிசல்......!

ஒருமாதிரிக் கும்பலுக்குள் கும்பலாகச் சேர்ந்து இடிபட்டான். சொத்தியனால் எவ்வளவு நேரந்தான் ஈடு கொடுக்க முடியும். இடிபட்ட கும்பல் மீது தன்சால்வை படாமல் ஒரு விசிறு விசிறி இரண்டு உரப்பு விட்டார் உடையார்.

அவளவுதான் காலைந்து சொந்தக் காலற்ற பிறவிகள் ஒன்றாய்ச் சரிந்து விழுந்தன. அவர்களுக்காகக் காலம் காத்துக்கொண்டிருக்கவில்லை, சபை தொடங்கிவிட்டது. சின்னான் மெல்லக் கண்களைத் திறந்தான். தன்மீது விழுந்து கிடந்த சதைப்பற்றில்லாத எலும்புக் குவியலெல்லாம் எழுந்து போய்விட்டதை உணர்ந்தான். மெதுவாக கையை ஊன்றி எழுந்திருக்க முயற்சித்தான். மீண்டும் தரையில் சரிந்தான். விலாப்புறத்தில் ஏதோ ஒன்று அழுத்துவதை உணர்ந்தான். தான் எழுந்திருப்பது போன்ற உணர்வு தோன்றவே முறிந்து விடாதபடி கழுத்தைச் சரித்துப் பார்த்தான்.

தன்னைப்போல, தன்னிலும் கேவலமான ஒரு ஜீவன். மூப்பின் மூர்க்கப் பிடியிலே முறுக்கி, நெரிக்கப் பட்டு; முறிந்து விழும் நிலையில் இருக்கும் அந்தப் பிறவி தன்னைத் தூக்கி விட்டதை உணர்கிறான். தேகமெல்லாம் ஓடிக்கொண்டிருந்த நன்றிக் குழம்பிலிருந்து இரண்டுதுளிகள் நீர்வற்றி உலர்ந்துவிட்ட கண்களிலிருந்து வடிந்து வற்றி மறைந்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளமையால் வஞ்சிக்கப்பட்டு, முதுமையால் முறியடிக்கப்பட்டு; இருமைக்கும் நடுவிலே வாழ்வு நடாத்தும் அவனை கேவலம் மூப்பின் முதிர்ச்சியில் வாழும் நரைக் கிழவன் கைகொடுத்து தூக்கி நிறுத்துவதா? இதில் என்ன ஆச்சரியம், முறிந்து விழும் மரத்துக்கு முட்டுக் கொடுக்க முறிந்துவிட்ட மரக் கிளை தானே உதவுகிறது.

சின்னானும் நரைக் கிழவனும் தமது தோல்வியை ஒப்புக் கொண்டவர்களாக மீண்டும் தேர் முட்டியடிக்கு வந்து சேர்கின்றனர். வயிற்றில் நடக்கும் கொடிய போராட்டத்திற்கு ஈடுகொடுக்க முடியாத கிழவன் மெள்ளத் தரையில் சரிந்து விடுகிறான்.

சின்னான் எங்குகின்ற மனத்தோடு எதிர்காலத்தில் நம்பிக்கை வைத்தவனாக இருக்கிறான். நாழிகைகள் பல நத்தைவேகத்தில் நகர்ந்து நகர்ந்து சென்று விட்டன.

சின்னான் மெள்ளத் தலையை நிமிர்த்திப் பார்த்தான் இரண்டாம் சபை யோகக்காரரும் இடம் பெயர்ந்து கொண்டிருந்தனர்.

பசிவேகம் உந்தி இழுக்க எழுந்து நடந்தான். பத்துப் பதினைந்து பேர்தான் இருக்கும் "இப்போதாவது இறைவன் வழிவிட்டாரே "என்று தலையிலே மூன்று குட்டுப் போட்டுக் கொண்டு குந்தினான்.

வெற்றுச் சட்டிகள் வழிக்கப்படும் ஓசை அவன் காதுகளில் தெளிவாகவே கேட்டது. சிறிது நேரத்திற் கெல்லாம் ஒரு பெரியவர் சோறு, கறி, கூட்டு, குழம்பு. எல்லாம் சேர்ந்த குழையலை தொட்டுத் தொட்டு போட்டு விட்டுச் சென்றார். அவ்வளவுதான் அவர்களுடைய யோகம்.



தனக்கு முன்கிடக்கும் சோற்றுக் குவியலைப் பார்க்கிறான். சுற்று வட்டத்தில் பரந்துகிடக்கும் பருக்கைகளை எல்லாம் ஒவ்வொன்றாகப் பொறுக்கி ஒன்றாகச் சேர்க்கிறான். சோற்று முடிப்பைத் தூக்கிக் கொண்டு தேர்முட்டியடிக்கு வந்து சேர்ந்து விட்டான்.

துண்டைப் பிரித்துப் பார்க்கிறான்; அவனுக்கிருப்பதோ அசுரப்பசி; ஆனால், கிடைத்திருப்பதோ ஒரு பொரியுருண்டை அளவுதான்!! என்னசெய்வது? நாவிலே ஊறிய நீர் சோற்றினுள் வடிந்து சொதியற்ற பஞ்சத்தைப் போக்க... வயிறு பலாத்காரப்புரட்சியில் இறங்க...எப்படியாவது இதை உருட்டி வாயில் போட்டுக் கொண்டால் சொற்ப நேர நிம்மதியாயினும் கிடைக்கும் என்ற நம்பிக்கை வலுக்க... கரம் நீள்கிறது. ஒரு திரளை திரட்டி விட்டான் அது வாயை அடையும் சமயம்....

"உம்...உம்..." அவன் முதுகுப் புறத்தில் இருந்து வந்தது முனகல்.

திரும்பிப் பார்க்கிறான்.

'சோறு முடிஞ்சுதே...' ஏமாற்றத்தின் சாயல் நரைக் கிழவன் குரலில் தொனிக்கிறது. சக்தியற்ற நிலையில் தலையை நிமிர்த்திப் பார்க்கிறான். அடிவயிற்றில் நடக்கும் கோரயுத்தத்தின் சாயல் முகத்தில் கோடிட்டு நிற்கிறது.

ஒருகணம் இரண்டு சோடி கண்களும் ஒன்றை ஒன்று சந்திக்கின்றன.

மறுகணம்—

சின்னான் கண்களில் நீர்த்திவலைகள் துளிர்த்து, நிறைந்து, வடிந்தன. ஆற்றாமையால் கிழவர் பார்வையை தாழ்த்திக் கொள்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்னான் கரத்தில் இருந்த சோற்றுக் குழையல் இருந்த இடத்தில் விழுகிறது மறுவினாடி உணர்வற்ற அவன் கரங்கள் அதை இழுத்து கிழவர்முன் விடுகின்றன. சின்னான் எழுந்து நடக்கிறான். அவன் அகத்திலே ஒருவித திருப்தி மனிதக்களை அவன் முகத்தில் வடிகிறது.

முடிவற்ற பெருவெளியில் தாண்டித் தாண்டி நடக்கிறான். அவன் போகுமிடம் அவனுக்கே தெரியாது. தேர் முட்டியில் கட்டப்பட்டிருந்த ஒலிபெருக்கி பாடுகின்றது

"அரிது... அரிது... மானிடராய்ப் பிறத்தலரிது......"

---

**ஒலிக்கும் குரல் செவிக்குப் பிடிக்கவில்லையே என்று கரத்தால் பொத்திக்கொண்டது சமுதாயம் ஆனால் குரல்கள் ஒலிக்காமல் நின்றனவா ......?**

# பரம்பரைக் குரல்

நீல வானத்தின் நெடுங்கதவுகள் திறக்கப்பட்டிருந்ததால் விண்மீன்களின் எழிற்பார்வை நிலமகளுக்குக் கிடைத்துக் கொண்டிருந்தது. முத்துச் சரங்களைப் போன்ற வான வித்துக்கள் ஏதோ ஒன்றின் வரவை ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டு இருந்தன. அவைகளின் ஆவலைப் பூர்த்தியாக்க இன்று அவள் புது வேடம் தாங்கிவந்தாள்.

நிர்வாணக் கோலத்தோடு நெடுவானத்திற்கு வந்திருக்கிறாளே இவள் என்ன நாடகக் கணிகையா......?

சே......சே......வெட்கம் கெட்ட இவளுக்குப் பெயர் தான் வெண்ணிலவா....?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நட்சத்திரக் கூட்டங்களுக்கு அவளைப் பார்க்கப் பிடிக்கவில்லை. அவைகள் ஒவ்வொன்றாக எரிந்து போனவற்றின் அடிச்சுவட்டிலே காலடியைப் பதியவைத்தபடி இருந்தன. உலகம் ஓரங்க நாடகத்துக்குரிய ஒத்திகையைப் பார்த்துக் கொண்டிருந்தது. மக்கள் கூட்டமெல்லாம் ஏதோ ஓர் உலகத்தோடு தமக்கு உறவு கிடைத்து விட்டதைப் போல நினைத்துக் கொண்டு இமைகளை இறுக மூடிக்கொண்டன. சற்றுமுன் வீண் ஆடம்பரத்தின் விளைநிலமாக இருந்த வீதிகள் எல்லாம் அழுதோயும் குழந்தை போல அமைதியில் ஆழ்ந்திருந்தன. ஊரே உறக்கத்தில் ஊறிக் கிடந்தது.

"உம்... உம் — உம்... ஆ..."

கடமைக்காக இப்பூமித்தாயின் காலடியிலே தள்ளப்பட்டு அதன் மிதிப்பிலும் நெரிப்பிலும் தன் வாழ்க்கையின் நாற்பது வருட சக்கரங்களை உருட்டித் தள்ளிவிட்ட செல்வி மாத்திரம் உடலைப்பிடித்துலுக்கும் நோயின் வேதனை தாங்காது முனகியபடி புரண்டுகொண்டிருந்தாள். உறக்கம் அவளை நெருங்க மறுத்துக்கொண்டிருந்தது. உள்ளமெல்லாம் எங்கோ மக்கிமறைந்து உக்கி உழுத்து உருவற்றுப் போன வாழ்க்கைச் சூழுவழியில் எதிர் நீச்சல் அடிக்கும் பிரயத்தனத்தில் சிக்கித் தவிக்க......

கடந்துபோன வாழ்க்கை அத்தியாயங்கள் அவள் உள்ளத்தில் கதைபோலத் தொடர......

செல்வி எங்கோ பிறந்தாள்; எங்கோ வளர்ந்தாள்; ஆனால் இன்று அவளுக்கு சொந்த ஊர் யாழ்ப்பாணம். ஆம் வெத்தலைக்கார நல்லமுத்தாளின் வளர்ப்பிள்ளைதான் அவள். உங்களில் அநேகருக்குத் தெரிந்திருக்கலாமே. நீங்



கள் அறிவதற்கு அவள் என்ன எலக்ஷேஜன் பேபியா...? நிச்சயமாக சிலராவது கண்டிருப்பீர்கள் சுருட்டைத்தலைப் பிச்சைக்காரி, பஸ் நிலையத்தில் நாள் தவறாமல் காணக்கூடிய உருவந்தான். வயது ஐந்தைக் கடந்து ஆறுவதை அணுகிக்கொண்டிருக்கலாம்.

பால் வடியும் அவள் முகத்தில் பசிக்களை படிந்திருப்பதைப் பார்க்க முடிகிறது. அவள் உதட்டில் இருந்து உதிரும் வார்த்தைகளுக்கு மழலை என்று பெயர் சமைத்து அதை யாழ் வெல்லுமா? குழல் வெல்லுமா? என்று மகுடிக் கணக்கெடுக்க கலியுகத்துக் கவிஞர்கள் முன் வராத காரணத்தால் அவள் பழைய பல்லவியை பழகிப் போன பாட்டைப் பாடுகிறாள்....

"ஐயா ...! பிச்சை... எனக்கு அம்மா இல்லை... அப்பா இல்லை... வயிறு பசிக்குது ஏதேன் குடுங்கம்மா.."

"ஐயா ... பிச்சை ..."

மனனப் பயிற்சியில் கைதேர்ந்த மாணவர் தமக்குத் தெரிந்த பாடத்தை திரும்பத் திரும்பச் சொல்லி தமது சாமர்த்தியத்தை சாதித்துக் கொள்ளும் தன்மை போல செல்வி தனக்குப் பழகிப்போன பாடத்தை ஒவ்வொருவர் முன்னும் சென்று ஒப்புவிக்கிறாள்.

ஒரு சுற்றுச் சுற்றி வருவதற்குள் எத்தனை பேருடைய நெழிப்புக்களை சுழிப்புக்களை வெறுப்புக்களைச் சம்பாதித்து விடுகின்றாள். என்ன இருந்தாலும் தினப்படி ஒன்றோ இரண்டோ உருப்படியாகச் சேர்த்து விடுவாள்.

வெத்திலைக்கார நல்லமுத்து நல்லபடி வாழ்கிறாள் என்றால் அதற்கு ஆறு வயதுச் செல்வியின் சம்பாத்தியமும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு காரணந்தான். போட்ட முதலுக்குப் பிழை இல்லாமல் ஆதாயம் வருகிறது, எங்கோ தர்மாஸ்பத்திரியில் யாரிடமோ பத்துரூபாய் கொடுத்து வாங்கிய பண்டந்தானே செல்லி.

* * * *

செல்லி எங்காவது ஒரு மாடி வீட்டில் பிறந்திருந்தால் தனது பதினாறாவது பிறந்த தினத்தை பரபரப்பாகக் கொண்டாட வேண்டிய வயது இப்போது அவளுக்கு.

செல்லி வளர்ந்துவிட்டாள். பருவத்தின் பூரிப்பு அவளைப் பாவாடைக் காரியாக மாற்றி விட்ட காலம் அது. இளமையின் சின்னங்கள் அவள் மேல் சட்டையை உறுத்துகின்ற பருவம்.

வறுமையின் வரட்டுப் பிடிக்கும் பருவத்தின் பழபழப்புக்கும் இடையில் நடந்துகொண்டிருந்த பயங்கரப் போராட்டத்திலும்கூட அவள் ஏழ்மையில் மின்னிய எழிலை திரையிட்டு மறைக்க முடியவில்லை.

முற்றிய நோய் நிலையில் தர்மாஸ்பத்திரியில் இருந்து பெரியாஸ்பத்திரிக்கு போய் அங்கும் எத்தனையோ வெட்டுக்கள், கொத்துக்கள், ஊசிகள், இளைகள் பெற்றபின் உயிர் தப்பாது என்ற நிலையில் கைவிடப்பட்டு யாரோ பெரிய மனிதர்கள் தங்கள் மேதா விலாசத்திற்கு மெருகிடும் வகையில் தானமாகக் கொடுத்த அந்தக் கந்தல் பாவாடை இளமைமுறுக்கேறிய அவள் மேனியழகை முற்றாக மூடிமறைக்கும் முயற்சியில் முறியடிக்கப்பட்டு தன் தோல்வியை ஒப்புக்கொண்ட வண்ணம் அரையில் தொங்கிக் கொண்டிருந்தது.



இந்திரப் பழமை வாய்ந்த அந்தப் பெரும் ஜாக்கெட் இளமையின் வாளிப்பில் குழுமை பெற்ற அங்கங்களை உள் அமுக்கும் பிரயத்தனத்தில் தனது ஆற்றாமைக்காக அழுது வடிந்து கொண்டிருந்தது. படிந்திருந்த புழுதிகளும் அழுக்குகளும் சுருண்டுகிடந்த சிகை அழகை குழி பறிந்து நின்ற கன்ன அழகை காட்டாது மறைக்க முடியவில்லை.

செல்லி இன்னும் பழய பல்லவியைப் பாடுகிறாள், அது அவள் தொழில்.

**“ஐயா...பிச்சை...என்க்கு அப்பா இல்லை...அம்மா இல்லை... வயிறு பசிக்குது... ஏதேன் குடுங்கம்மா...”**

அன்று அவள் குழந்தை; இன்று பருவப்படியில் காலடி எடுத்து வைத்திருக்கும் குமரி. சிறுமாற்றம் தான் அன்று அவள் குரலில் மழலையின் சாயல் இன்று கன்னிமையின் கனிவு.

அன்று அவள் வரவைக் கண்டு உதட்டைப் பிதுக்கியவர்களும் முகத்தைச் சுழித்தவர்களும் இன்று அவள் வரவை எதிர்பார்த்துக் காத்திருந்தனர். அன்று அவள் பிச்சை என்று கேட்கும்போது பெரிய மனுஷத் தனத்தோடு மேல்நோக்கிய லோங்ஸ் மைனர்கள் இன்று கந்தலுடையில் மறைந்திருக்கும் அவள் இளமை எழிலைக் கண்டு இரசிக்க பஸ் நிலையத்தில் மூலைமுடக்கெல்லாம் தேடவேண்டிய நிலைமை.

இந்த நிலைமை நீடிப்பதைச் செல்லி விரும்பவில்லை. சீ...சீ...பிச்சை எடுத்து வாழும் வாழ்வும் ஒரு வாழ்வா? உழைக்கும் சக்திக்கு ஊதியம் கிடைக்கிறதா? ஒரு நாள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முழுவதும் பஸ் நிலையத்தைச் சுற்றி சுற்றி வலம் வந்தால் இரண்டோ மூன்றோ தேறலாம். அப்படித் தேடுகிற பணம்தான் நமக்கு சொந்தமா? அதுகூட அடிமை கொண்ட நல்லமுத்தாளுக்குத்தானே சொந்தம். உயிர் வாழ ஒருபிடி சோறு கிடைக்கலாம் அவ்வளவுதான்.

செல்வியின் மனதில் வித்தூன்றிய வெறுப்பு நாளாக நாளாக வளர்ந்து கிளைவிட்டு விரக்தியாக மாறி பிச்சை எடுக்கும் தொழிலுக்கு மூடு விழா அமைக்கும் அளவுக்கு முன்னேற்றி விட்டது. செல்வியின் இந்தப் போக்கு நல்ல முத்துக் கிழவிக்குப் பிடிக்கவில்லை.

ஈற்றில் செல்வி தனியானாள்.

அவளுடைய தனிமை வாழ்வில் அவள்பட்ட இன்னல்கள் இடைஞ்சல்கள் கொஞ்சமா? அதற்கிடையில் அவள் வாழ்க்கையை வெறுத்த நாட்கள் தான் எத்தனை? கூலிப் பிழைப்பென்று சில நாட்கள், குப்பை கூட்டிச் சிலநாட்கள். இப்படி ஓடிய நாட்களில்கூட கிடைத்தது ஒரு நிம்மதியா? கூலிப்பணத்தைக் கொடுப்பதுபோல கையைக்கிள்ளிய ஆசாமிகள் எத்தனை? குழிபறித்த கண்களில் குமரிச்சதை கொண்டு பார்த்த மேற்பார்வைக் காரர்கள் எத்தனை?

சே...சே...இதுவும் ஒரு வாழ்வா? குருத்தெறிந்த கொடி படரவேண்டிய காலத்தில் படர வேண்டும். பற்றுக் கோடு கிடைக்கவில்லை என்றால் குப்பைமேட்டில் விழுந்து கருகிச் சுருண்டு போகவேண்டும். இந்தத் தேவையை அவள் உணர்ந்த போது......

திருட்டுப் பார்வை பார்க்கும் தேநீர்க்கடை கிருஸ்ணன், கையைக் கிள்ளும் கணவதி மேஸ்திரி, கண்ணைச்



சிமிட்டும் கைலாசம்' பல்லைக்காட்டுகிற பம்பாய் நைஸ் பாலசிங்கம் எல்லோரும் வரத்தான் செய்தனர். என்ன இருந்தாலும் வண்டிக்காரப் பொன்னையனுக்கு அவள் வாழ்க்கைப்பட்டதை யாராலும் தடுக்க முடியவில்லை.

சட்டம் அவள் மணத்திற்குத் துணை நிற்கவில்லை. சம்பிரதாயம் குறுக்கிடவில்லை. கோயில் குளம் மேளம் தாளம் தாலி எதுவுமே இல்லாமல் அவள் திருமணம் முடிந்தது. வெறும் மனப்பிணைப்புத்தான். இதற்குத்தான் பெயர் காதலோ...?

வண்டிக்காரப் பொன்னையன் வாழ்க்கை என்ற வண்டியில் செல்வியை இருத்தி அன்பு பண்பு என்ற இணைக் கயிறிட்டு துன்பமே தெரியாத அளவிற்கு மூன்று மாதங்கள்வரை இழுத்து வந்துவிட்டான். அவ்வளவுதான். அவர்களின் இணைபிரியாத இன்ப வாழ்வில் விஷம் புகுந்தது.

அன்று—

மூட்டுக்கடைச் சந்தைக்கு முறித்துத் திரும்பும் முகரியில் ஓர் மரக்குத்தி அதில் வாழ்வின் சுகதுக்கம் உணராத கற்குண்டுகள் நாலு ஏதோ கதை அளந்து கொண்டிருந்தன. பக்கத்தில் நிறுத்திக் கிடந்த வண்டிக்குள் பொன்னையன் நல்ல தூக்கம் போட்டுக் கொண்டிருந்தான்.

"மச்சான் பொன்னையனுக்கு அதிட்டம் அடிச்சாப் போலை ஒருத்தருக்கும் அடிக்கேலையடா."

"அவளின்ரை நடை ஒண்டுக்கே சரோசாதேவி தோத்துப் போவள் நீ என்ன சொல்லுறாய் கிட்டிணா"?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"டேய் மெள்ளப் பேசடா வண்டி இக்கை அவன் படுத்துக் கிடக்கிறான்.

"கதையை மற்றவளமாய்த் திருப்படா கணவதி அவன் எழும்பினைப்போலை கிடக்கு."

"டேய் எந்தத் தமிழிச்சியடா இப்பிடிச் செய்வள் கட்டின புரிசன் இருக்க......"

"எடே...என்னடா விசயம்..."

"அது தெரியாதேடா எங்கடை பொன்னையன்ரை பெண்டிலின்ரை விசயம். அவள் உந்தக் கணக்கன் கந்தசாமியோடை செய்யிற கூத்து... ஐயோ ஊரெல்லாம் ஒரே கதை..."

"அவளின்ரை கதையைப் பேசாதை...அவன் ஆமானவனண்டால் அவளைக் கட்டுவனே...! ஊருள்ளவன் தேடாத சரக்கை எங்கையோ இருந்துவந்த பொன்னையனும் பாவி கட்டி இழுக்கிறான்."

இஞ்சாய் உந்த ஊர் வம்பை எங்களுக்கு ஏன்? நீ வா அண்ணை 'பாவமன்னிப்புக்கு' நேரமாய்ப் போச்சு.

கூட்டம் கலைந்தது. பொன்னையன் காதுகளில் விழுந்தது அரைகுறைக் கதையானலும், கடைசிப் பகுதியை ஓரளவு தெளிவாய்க் கேட்க முடிந்தது. அவன் இதயத்தில் அந்தக் கதை கிளப்பிவிட்ட கடும்புயலின் வேகம் தணியாது வீசிக்கொண்டிருந்தது. செல்வி இப்படிப்பட்டவளா? இவளா எனக்கு மனைவி...? சே... இவளும் ஒரு பெண்தானு? விபச்சாரி...! இவளோடு வாழ்கின்ற வாழ்வும் ஒரு வாழ்வா? உள்ளத்தில் அடித்துக் கொண்டிருந்த சூருவளியின் உத்வேகம் உந்தியிழுக்க விடுவிடென்று நடந்தான். கால்கள் நேர்சீர் இல்லாமல் விழுந்துகொண்டிருந்தன.



* * * * *

போனவன் போனவனேதான், திரும்பவே இல்லை. செல்வியின் வாழ்வில் தனிமை இருள் சூழ்ந்தது.

வாழத்தெரியாதவர்களுக்காக நீலிக்கண்ணீர் வடிக்கும் சமுதாயம் வாழத் துடித்த இளம் இதயங்களுக்கிடையில் குறுக்குச் சுவர் அமைத்து மகிழ்ந்து கொண்டிருந்தது.

வாழ்பவர்களை சந்தேகிப்பதும் செத்தவர்களை நம்புவதும்தான் இந்த உலகத்தின் பண்பாகிவிட்ட பின்னர் அவளுடைய உள்ளம் வளர்த்து வைத்திருந்த காதல் வாழ்வு கானல் நீராவதைத் தவிர வேறு வழி?

அறிவைச் சிறு அகல் விளக்காகக்கூட பெற மறுத்து மடமையைப் பெரிய தீப்பிளம்பாகப் பெற்று மகிழும் இச் சமுதாயத்தில் செல்வியின் வாழ்வு...?

செல்வியின் வாழ்வு வெட்டிப்பிரிக்கப்பட்டது. பொன்னையன் எங்கோ மறைந்தே போகும் மாலைச் சூரியனுகி விட்டான்.

தம் இச்சைக்கு திரைகட்டி கதை பரப்பும் சோம்பேறிக் கும்பலின் புரட்டைக் கேட்டு கட்டியவளை நட்டாற்றில் விட்டோடும் கயவர்களுக்காக காத்துக்கிடந்து வாழ்வைப் பாழடித்துக்கொள்ள அவள் விரும்பவில்லை. கதை பரப்பிய கும்பல் வெற்றிப் பெருதத்தோடு அவள் தனிக் குடியிருந்த ஆலமரத்தடியை சுற்றிச் சுற்றி வலம் வந்து கொண்டிருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வியின் வாழ்வில் புதியதோர் திருப்பத்தை இந்த நிலைமை தோற்றுவித்தது. பிச்சை எடுக்க அவள் கூசினாள். பசி அவள் கழுத்தை நெரித்தது.

முடிவு —

மேடை ஏறி மூச்சுப் பிடித்து கண்ணகி பெருமை பேசும் பித்தர்களால் வாழ்க்கைப் பிரச்சினைகளை உற்பத்தியாக்கும் அவள் வயிற்றுக்கு கஞ்சிவார்க்கும் மார்க்கத்தைக் காட்ட முடியவில்லை. கோவலனுக்காக காத்துக் கிடந்த கண்ணகிக்கு கஞ்சிக்கவலை இருக்கவில்லை.

ஆனால் செல்விக்கு...?

இந்நிலையில் புதியதோர் தொழிலுக்கு இழுத்துவரப் பட்டாள். இங்கே தொழிலாளி முதலாளிப் பிரச்சினைகள் இல்லை. உடல்தான் மூலதனம்; உழைப்போ சொற்ப நேரம்; வரும்படியோ அதிகம். நீர் நிலைகண்ட பாலைவனப் பிரயாணிபோல சுற்றிச் சுழன்று வரும் கூட்டத்துக்கு அவள் தான் அரசி. கசங்கிய மலராயினும் கலைந்து வந்த கருவண்டுக்கு இரையாகும் போது இனிக்கத்தான் செய்தது.

இருட்டிலே என்னவள் என்னவள் என்று உறவுகொள்ளும் திருட்டுக் கூட்டத்தில் எவனாவது ஒருவன் விடிந்தபின் தன் உறவு முறையை நிலைப்படுத்த முன்வந்திருந்தால் ...

அந்த வாழ்வு அவளுக்குக் கிட்டவில்லை. ஆதலால் மாதவி வாழ்வை மாற்றவும் முடியவில்லை.

உழுத்துப்போன அந்த வாழ்வு வயிற்றை உப்பிப் பெருக்க வைத்து உயிர்ப் புழுவைத் தோற்றுவிக்கும் என்று அவள் கண்டாளா ?



ஊதிப் பெருத்த வயிறு வற்றிய போது ...

செல்விக்கு ஒரு மகள்;

உலகத்தில் அவளுக்கு உருத்துள்ள ஓரே சொத்து. பிள்ளையில் தமக்குள்ள உரிமையை நிலைநாட்ட எந்தத் தந்தையும் முன்வராத காரணத்தால் பங்கில்லா முதல் ஒன்று அவளுக்கு.

நேற்றுவரை அவள் அன்றைய பொழுதை கழித்து விட்டால் போதுமென்றுதான் இருந்தாள்; ஆனால் இன்று அவளுக்கு எதிர்கால நம்பிக்கைகள் விருப்புகள் அதிகமாயிற்று. காரணம் தனது மகள் தன்னைப்போல இன்னல்கள் படக்கூடாது. பிச்சைக்காரியாய், அடிமையாய், விபச்சாரியாய் வேண்டா வாழ்வு தன்மகள் வாழக்கூடாது என்பதற்காக அவள் பட்ட கஷ்டங்கள்தான் எத்தனை? தன் மகள் பொட்டு வைத்து, பூ முடித்து பள்ளி செல்லும் அழகை கற்பனை செய்து பார்த்த இரவுகள்தான் எத்தனை ? எப்படியோ ஐந்து வயது வரை எந்தக் கவலையும் தோன்றாதபடி வளர்த்து விட்டாள். எதிர்காலத்தைப்பற்றி எண்ணிய போதுதான் அவள் தலை கிறுகிறுத்தது. அவள் கண்ட கனவெல்லாம் வெறும் கானல் நீர்தானா ?

* * * * *

கடந்து சென்ற எண்ணக் கோவையின் துன்பப்பிணிப்பில் உழன்று கொண்டிருந்தவள் வாழ்வுப்பிரச்சினைகள் கொடுத்துவிட்ட வியாதிப் பிடிப்பால் அணுவணுவாகச் செத்துக் கொண்டிருக்கும் தன் உடலை ஒரு முறை உற்றுப் பார்க்கிறாள். ஒரு பெருமூச்சு. அருகிலே கவலையின் கோடு கிழிக்கப்படாது தூங்கிக் கொண்டிருக்கும் குழந்தையின் முகத்தை அவள் பார்க்க முனைந்த போது......

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

—எங்கும் ஒரே இருள்—

ஆலமர வைரவரின் மின்விளக்கு வீசிய காற்றின் வேகம் தாங்காது அணைந்து விட்டது. வானவீதியில் பவனிவந்த எழில் நிலவும் வஞ்சம் நிறைந்த இந்த உலகத்தைப் பார்க்க விரும்பாது சரிந்து விட்டது.

செல்வியின் வாழ்வும் முடிந்து விட்டது.

மறுநாள்—

பருவத்துடிப்பில் துள்ளிக்குதிக்கும் இளவட்டங்கள் போல பரபரத்துக் கொண்டிருந்தது பஸ் நிலையம்.

தீப்பொறி, தேசாபிமானி, தினகரன், வீரகேசரி, ஈழநாடு

—பேப்பர்காரன் குரல்.

"வட்டுக்கோட்டை, சித்தங்கேணி, மாதகல்"

—கொண்டக்டர் குரல்

"இரண்டு கோர்வை ஊசி பத்துச் சதம். இருபது இனிப்பு பத்துச்சதம். —வாண்டுப்பயல்கள் குரல்

எல்லாவற்றையும் ஊடறுத்து வனஸ்தாயியில் ஒரு குரல்,

"ஐயா பிச்சை... எனக்கு அப்பா இல்லை... அம்மா இல்லை... வயிறு பசிக்குது... ஏதேன் குடுங்கம்மா..."

மழலையின் கொச்சை மாறாத குழந்தைக் குரல். பஸ் நிலையத்திற்கு எப்போதோ பழகிப்போன பழைய குரல். அன்றொலித்த குரலின் அடிச்சுவட்டிலே இழையோடி நின்றொலிக்கும் புதுக்குரல். ஆம்! பரம்பரைக் குரல். மீண்டும் ஒலிக்கிறது.

**"ஐயா பிச்சை... எனக்கு அம்மா இல்லை... அப்பா இல்லை... வயிறு பசிக்கிது... ஏதேன் குடுங்கம்மா...!!**

---

சேய் பசியாற் துடித்தது,
தாய்மை அவளை விரட்டியது;
அவள் திருடினாள்.
முடிவு ?

# பட்டினி

"எங்கே மாமா போறீங்க?" என்று கொடிக்கொரு தடவை கேள்வி போடும் துடுக்குக் காரப் பயல் ரவி கேட்டான்.

"உஸ்.... உஸ்.... சத்தம் போடாதே. சத்தம் போட்டால் அந்தக் காக்கிச் சட்டை வெளியாலை புடிச்சு விட்டுடுவான்" என்று பயம் கொடுத்துக் கொண்டே உள்ளே நுழைந்தேன்.

அங்கே—

உயரத்தில் ஒருவர். அவர்தான் நீதிபதியாம். இவர் சொன்னதுதான் இங்கே தீர்ப்பு. பாமரனின் வேலை இப்பூவுலகில் இவருக்குத்தான் சொந்தம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சற்றுக் கீழே பத்துப் பன்னிரண்டு கறுப்புக் கோட்டுகள். இவர்கள்தான் சட்டத்தை கைக்குள் போட்டுக் கொண்டு, நீதியை உருட்டிப் பிரட்டி பல்வேறு வடிவங்களில் பிறக்க வைத்துக் கொண்டிருக்கும் நவயுக பிரமாக்கள்.

நம்மோடு சேர்ந்திருக்கும் கூட்டமெல்லாம்..... வேடிக்கை பார்க்கும் கூட்டமாம்.

அதோ !.... அந்தக் கூண்டு, அதற்குள் ஒரு பெண். அவள் கையில் ஒரு குழந்தை ... தெரிந்த முகம் போல் இருக்கிறாளே !....

"அந்த 'எல்க்றிக்' "வீட்டுக்காரியா இவள்?" என்னை யறியாமலே என் வாயசைந்தது.

"உனக்கிவளைத் தெரியுமா தம்பி? பாவம் போல் இருக்கிறாளே! என்ன இருந்தாலும் இந்தக் காரியத்தை இவள் செய்திருக்கவே மாட்டாள். நீ என்ன சொல்கிறாய் தம்பி?" பின்னுக்கிருந்தவர் ஆதாரத்தோடு அபிப்பிராயத்தை வெளியிட்டார், நானும் ஏற்றுக்கொண்டு தலையசைத்தேன்.

"பிச்சைக் காரியளின்ரை விசயம் உனக்குத் தெரியாது தம்பி." என்றார் மற்றவர் எல்லாம் அறிந்தவர்போல.

"ஏன் மாமா இவளை அடைத்து வைத்திருக்கிறார்கள், பாவம் போல இருக்கிறாளே....?" என்று உரத்த குரலில் தன் பங்காகக் கேட்டான் ரவி. சுற்றும் முற்றும் இருந்தவர் பார்வை யெல்லாம் எங்கள் பக்கம் திரும்பிற்று. அந்தக் காக்கிச்சட்டை கூட ஒரு முறை முறைத்தான்.



அவளவுதான் நீதிபதியின் வாயிலிருந்து வந்த கேள்வியொன்று எல்லோர் கவனத்தையும் அப்பால் இழுத்தது. "உன் பெயரென்ன?"

அவள் வாய் எதுவுமே பேசவில்லை மௌனமாக குனிந்து நின்றாள். அவள் இடுப்பில் தொங்கிக் கொண்டிருந்த 'தேரைக் குஞ்சு' மாத்திரம் 'ஆ.....' வென்று வாயைப் பிளந்தது.

மீண்டும் அதே கேள்வி. அவர் குரலில் கடுமை தொனித்தது.

"**பட்டினி**" அவள் வாயசைந்த அசைவில் மேற்கூறிய பெயரைப் பெற்றெடுத்தது.

நீதிபதிக்கு அது புரிந்ததோ? இல்லையோ? இப்போது அவர் குரலில் மெல்லிய சிரிப்பும் கடுமையும் கலந்து ஒலித்தது.

"பசியோ பட்டினியோ? அதைப்பற்றிக் கேட்கவில்லை. உன் பெயரென்ன வென்று கேட்கிறோம்?"

வாயசைக்க முயன்றாள் ஆனால் வார்த்தைகள் வரவில்லை. தலை கிறு கிறுக்க இருகைகளாலும் தலையை இறுகப் பிடித்துக் கொண்டாள். சற்று நேரத்திற்கெல்லாம் அவள் உடலோடு ஒட்டிக்கொண்டிருந்த அபூர்வப் பிறவி ஈனக் குரலில் முனகிற்று. கூண்டின் மூலையில் நிலைவிழந்து விழுந்து கிடந்தாள் அவள்.

கோடு ஒத்திவைக்கப் பட்டது. பலரும் பலவாறு பேசிக்கொண்டே சென்றனர். சிலர் வார்த்தையில் ஏளனம், சிலர் வார்த்தையில் பரிதாபம், சிலர் வாயில் சிரிப்பு, சிலர் கண்களில் .....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறுநாள் பத்திரிகையில் "**பட்டினிப் பெண்ணின் பரிதாப மரணம்**" என கொட்டை எழுத்துக்களில் செய்தி வெளி வந்தது. அவளை அறியாதாரும் அறிந்தவரும் செய்தியைப் பிரித்துப் பார்த்து உதட்டைப் பிதுக்கிக் கொண்டனர்.

*   *   *   *   *

"**பட்டினி**" இன்றைய நிலையில் அவளுக்கு அந்தப் பெயர் பொருத்தமானதுதான். பெற்றோர்கள் இட்ட பெயரோ "**பத்தினி**" அவள் எப்படித்தான் இருந்தாலும் பெயராவது நன்றாக இருக்கட்டுமே என்று எண்ணினார்கள் போலும். காலத்தாற் கரைந்துபோன தமிழ்ச் சொற்களிலே அவளுடைய பெயரும் ஒன்றாகி விட்டது.

பென்சனியர் கணபதிப்பிள்ளையின் பேத்தி தனது கொச்சை வாயால் அவளை அழைக்கும் போதெல்லாம் "பட்டினி" என்றே அழைத்தாள். இன்று ஊரே அப்படித் அழைக்கிறது.

சுன்னாகம் "றேல்வே ஸ்ரேசன்" அதற்கு ஒருமைல் தள்ளி ஒரு 'எல்க்றிக்' கம்பம். அதற்கு முன் ஒரு பெரிய சுற்றுச்சுவர் அதை ஒட்டினாற்போல் ஒரு வீடு. அதை அந்த வீட்டு அந்தஸ்திற்கு உயர்த்தியதே கூரையும் பக்கச் சுவரும்தான்.

கேவலம் கூரை சிற்றடிக்கப்படாமல் பித்தல் சாக்கால் வேயப்பட்டிருந்தது. பக்கச் சுவராக பென்சனியர் வீட்டுக் குப்பையில் கிடந்த பித்தல் தட்டிகள் சாத்தப்பட்டிருந்தன. புறச்சுவராக கருணையோடு கணபதியார் வீட்டால் எழுப்பப்பட்ட உண்மைச் சுவரே இருந்தது. ஒரே சமயத்தில் பென்சனிவர் வீட்டு மதிலாகவும் பட்டினி



வீட்டுப் புறச்சுவராகவும் இருந்த பெருமை அந்தச் சுவருக்குத்தான் உண்டு.

பட்டினி வீடு மின்சாரவசதி பொருந்திய வீடு. அப்படியான இடமாகப் பார்த்துத்தான் தேர்ந்தெடுத்திருக்கிறாள், இல்லையென்றால் இருபத்திரண்டு சதத்து மண்ணெண்ணைக்கும் 5 சதத்து நெருப்புப் பெட்டிக்கும் எங்கே போவாள்?

உலகமே அவளை ஒதுக்கி வைத்து இருக்கும் போது தான் மட்டும் அவளை ஒதுக்காமல் அவளுக்கு ஒளியை மறுக்காமல் அவள் வீட்டிற்கு முன்னே எரிந்து கொண்டிருந்தது அந்தக் கம்பத்தில் தொங்கிய மின் விளக்கு.

கடலைக்காரச் சின்னம்மாவின் மகள் தான் "பட்டினி". ஆனால் இன்று அவள் அனாதை. அப்படி யாரும் சொல்லக் கூடாது என்பதற்காக அவள் கையில் ஓர் குழந்தை. அது அவள் காதலன் கொடுத்த பரிசு.

ஆம்! அவள் காதலித்தாள். என் செய்யக்கூடாதா...? காதல் ஒன்று தானே காலம், இடம், குலம், கோத்திரம் இவையொன்றும் பார்க்காது வளர்கின்ற பயிராச்சே.

"பட்டினி" சுமைதூக்கி சுப்பையனைக் காதலித்தாள். சண்முகம்பிள்ளையின் கடை வாசலில் ஆரம்பமான காதல் வீடு வரை சென்று சேர்ந்தது.

நேற்று வரை சும்மா பட்டினியாக இருந்தவள் இன்று முதல் திருமதி சுப்பையா பட்டினியானாள். சுப்பையனின் முரட்டுக் கரங்களின் அன்புப் பிடியிலே கட்டிக் கிடந்தாள், காலக்கணக்கின்றி பட்டினி. இல்வாழ்வு செழித்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தது. பட்டினியின் வீட்டில் புதிய ஒளி தோன்றிப் பிரகாசிக்கும் காலம் நெருங்கிக் கொண்டே இருந்தது.

காலச் சக்கரம் சுழன்றது. மூட்டை தூக்கி சுப்பையன் அசுர வேகத்தில் சென்று கொண்டிருந்த லாரியின் சக்கரத்திற்குள் அகப்பட்டு உயிர் துறந்தான். செய்தி கேட்டுத் துடித்தாள், பதைத்தாள், கத்தினாள், கதறினாள் என்ன பலன் ......?

“சுப்பையன் கால அரக்கனுக்கு இரையானான் பட்டினி தனிக்கிளையானாள்”

சுமைதூக்கி சுப்பையன் தன்னைக் காதலித்த குற்றத்திற்காக அவள் வயிற்றில் ஓர் பெரிய சுமையைக் கொடுத்துவிட்டுச் சென்றுவிட்டான்.

இன்று அவள் கைகளில் தவழ்கிறது அது.

* * * * * *

அன்று சனிக்கிழமை—

நல்ல வெய்யில் நடுப்பகல் ஒன்றிரண்டு மணியிருக்கும். கானல் பறந்து கொண்டிருந்தது. ரோட்டில் ஆள் நடமாட்டம் குறைவாக இருந்தது. அந்தச் சந்திக்குக் கொஞ்சம் தள்ளி “புறக்டர்” சங்கரப்பிள்ளை வீடு. அங்கே ஓர் ஆலமரம் நிழல் பரப்பிக் கொண்டிருந்தது. அந்த நிழலில் ஓர் குழந்தை, வயசு ஒன்று முழுசாகி இருக்குமோ சந்தேகம்தான் உடம்பிலே சதைப்பற்றே இல்லை. உள்ளே இருக்கும் எலும்புகள் வெளியுலகைப் பார்க்க முயன்று கொண்டிருக்கின்றன. கண்கள் குழிவிழுந்து கிடந்தன. எப்படியோ உயிர் மட்டும் இருந்தது. நெஞ்சு மேலும்



கீழும் இறங்கி ஏறியது. வயிறு கண்ணுக்குத் தெரியவில்லை. முதுகோடு ஒட்டிப்போய்க்கிடந்தது பார்க்கப் பரிதாபமாக இருந்தது. பாவம் பட்டினி இருக்க வேண்டிய இடத்தில் இருந்தால் அழகாய்த்தான் இருக்கும் என்ன செய்வது?

கண்கள் மூடிக்கிடந்தன. வாய் சிறிது நேரத்திற்கு ஒருமுறை திறந்து மூடியது. வானமாவது மழைபெய்தால் துளி நீராவது வாயில் விழும் என்ன செய்வது? ஒரே வெய்யில். நினைவற்ற நிலையில் கிடந்தது குழந்தை.

சிறிது நேரத்திற் கெல்லாம் அவள் வந்தாள். வேறு யாருமல்ல நமது பட்டினிதான். அப்போதெல்லாம் எப்படியிருந்தாள்? இப்போ இப்படியாகிவிட்டாளே! இதற்கு யார் காரணம்? கடவுளின் மீது பழியைப்போட்டு விடுவோமா? போட்டு விட்டுச் சும்மா இருந்து விடமுடியுமா? நமக்கேன் அந்தத் தொல்லை? யார் வேண்டுமானாலும் காரணமாக இருந்து விட்டுப் போகட்டும். யாரையும் குறை கூற மனமில்லையானால், அதோ! இருக்கிறதே “**விதி**” அதன்மீது பழியைப் போட்டு விடுவோம். யார்தான் கேட்கப் போகிறார்கள்?

“**பட்டினி**” குழந்தையை எடுத்து தனது மார்போடணைத்தாள். எங்கும் போக மனமின்றி அந்த நிழலிலேயே சிறிது நேரம் அமர்ந்தாள். குழந்தை தாயைப் பார்த்தது; குழந்தையைப் பார்த்தாள். கண்ணில் நீர் வழிந்தது அது பசியைப் போக்கி விடுமா?

தாயின் மார்பில் முகத்தை வைத்துத் தேய்த்தது குழந்தை. அவளோ பட்டினி செத்து ஒடிந்து போயி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ருக்கும் அவள் உடலில் எவ்வளவு பால்தான் இருக்கும்? சிறிது நேரத்தில் முகத்தைத் திருப்பியது குழந்தை. அதன் முகத்தில் ஏமாற்றம் பிரதிபலித்தது.

சேய் தாயைப் பார்க்க, தாய் சேயைப் பார்த்தாள். சிறிது நேரம் உணர்வற்று அப்படியே பார்த்துக் கொண்டிருந்தாள். மீண்டும் கண்களில் கண்ணீர்!

வெறிபிடித்தவள் போல் எழுந்தாள். "புறக்டர்" சங்கரப்பிள்ளை வீட்டின் மதிற்பக்கம் வந்து எட்டிப் பார்த்தாள். எவர் நடமாட்டத்தையும் காணவில்லை. சிறிது நேரம் அப்படியே நின்றாள்.

"புறக்டர்" வீட்டார் எல்லோரும் தூங்கிக் கொண்டிருந்தார்கள். அந்த வீட்டில் எப்போதும் சாப்பாட்டிற்குப் பின்பு உடலைப் பஞ்சு மெத்தையில் சாத்துவது வழக்கம். உண்டகளை தொண்டருக்கும் உண்டல்லவா? "புறக்டர்" வீடு இதற்குவிதி விலக்கா என்ன?

"பட்டினி" பார்த்துக் கொண்டே இருந்தாள். போய்க் கேட்டுப் பார்ப்போமா? குழந்தைக்காவது கொடுக்க மாட்டார்களா?

"இந்தநேரத்தில் போனால் நாயைத்தான் பதிலாக அனுப்புவார்கள்" அவளுடைய முந்தின அநுபவம் இதைச் சொல்லிற்று குழந்தையைத் திரும்பிப் பார்த்தாள். அது வாயைப் பிளந்துகொண்டு மிரள மிரள விழித்தது

அவளுக்கு எங்கிருந்து வந்ததோ அந்தத் துணிவு; "புறக்டர்" வீட்டுக் 'கேற்றைத்' திறந்துகொண்டு உள்ளே நுழைந்து விட்டாள் அடுக்களை அறைப் பக்கமாக அடிமேல்



அடிவைத்து நடந்தாள், அவள் உடலெல்லாம் வியர்த்துக் கொட்டியது! விறாந்தையைக் கடந்து உள்ளே நுழைந்து விட்டாள். எல்லோரும் ஒரே தூக்கம் — கதவைத் திறந்தாள் —

வள்.... வள்... வவ்..... வவ்......

சொல்லி வைத்தாற்போல விறாந்தையில் கட்டியிருந்த பெருஞ்சாதி நாய் தூக்கம் கலைந்தெழுந்து குலைத்தது.

"புறக்டர்" எழுந்து வந்தார். சுற்றும் முற்றும் பார்த்தார். மிரள மிரள விழித்துக்கொண்டு ஓட முயன்றாள் 'பட்டினி' "புறக்டரின்" முரட்டுக் கரம் தடுத்து நிறுத்தியது "திருட்டு நாயே.....!" என்று நித்திரை அலுப்புத்தீர ஓங்கி ஒரு அறை விட்டார், அவள் முதுகில். இதற்கிடையில் 'புறக்டர்' மனைவி போட்ட ஓலத்திலும், குஞ்சுகள் போட்ட கூக்குரலிலும் அண்டை அயலெல்லாம் கூடி விட்டது.

"திருட்டுக் கழுதை.....!"

"பட்டப் பகற் கள்ளி.....!"

"பிச்சைக்குத் திரிகிறவளின்ரை குணமே

இப்படித்தான்.....!!!"

இவைதான் வந்த கூட்டம் அவளைப்பற்றிக் கொடுத்த விமர்சனங்கள்.

சே..... சே..... அதிஷ்டமற்றவள் அந்த நேரம் பார்த்துத்தானா போலீஸ் வண்டி அந்தப்பக்கம் வரவேண்டும். வந்த வண்டி கும்பலைக் கண்டு தானாகவே நின்றது.

2698

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறுகணம்—

அவளைச் சுமந்துகொண்டு போலீஸ் வண்டி பறந்தது சிறைக்கூடம் நோக்கி.

மறுநாள்—

நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டவள் 'பட்டினி' என்று தன் பெயரைச் சொல்லிவிட்டு மறைந்துவிட்டாள்.

"தேனும் பாலும் கலந்து ஓடிற்றாமே மாவலியில், கனியும் கிழங்கும் மலிந்து காய்ந்ததாமே இங்கே!

அந்தப் பெருமை கொண்ட ஈழவள நாட்டிலா வந்து பிறந்தாள் "பட்டினி?"

பத்திரிகைச் செய்தி படித்தவர்கள் இப்படித்தான் பேசினர்.

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆசிரியர் அறிமுகம்

நண்பர் 'மாதகல் செல்வா' உங்களுக்குப் புதியவரல்லர். 1943-ம் ஆண்டு மாதகல் வாசியான குமாரசாமிக்கும் சந்திரகாந்தியம்மாவுக்கும் நான்காவது புதல்வராகப் பிறந்தார்.

'மன மாற்றம்', 'மர்ம மந்திரி', 'மூன்று கட்டளைகள்', 'மலர்ந்த வாழ்வு', 'இரட்டை உள்ளம்' 'வாழ முடியாதவன்', 'தீர்ப்பு' ஆகிய ஓரங்க நாடகங்களைத் தாமே எழுதியும் 'சோக்கிரட்டீஸ்', 'இரத்தக் கண்ணீர்', 'சிலம்பு' ஆகிய நாடகங்களில் பங்கேற்றும் நடித்து பரிசில்களும், பாராட்டுக்களும் பெற்றுள்ளார்.

சிறு கதைத் துறையில் துணிந்து கைவைத்திருக்கும் இவர் சிறந்த இளம் பேச்சாளரும்கூட.

கதைத் துறையின் ஆரம்பப் படியில் காலடி வைக்கும் இவர் 'தமிழ் முரசு' நடாத்திய இ. எ. சிறுகதைப் போட்டியில் 'அவனும் மனிதன்' சிறுகதைக்காகத் தங்கப் பதக்கப் பரிசைத் தட்டிக்கொண்டார்.

இவர் தம் எதிர்காலம் ஒளி மிகுவதாக.

அருள் சுப்பிரமணியம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org